Prescribed For

## T. S. L. C. Elementary Higher Grade Public Examination - 1922.

# நாலடியார்

(அரசியல் - முதல் ஐந்து அதிகாரங்கள்—131-1[illegible])

## மூலமும், உரையும்.

328
4.22

14 OCT 1922

[illegible] உயர்தரகலாசாலைத் தலைமைத்

தமிழ்ப்பண்டிதர்

நெ. ரா. சுப்பிரமணிய சர்மா

எழுதியது.

மதுரைப் புஸ்தகவியாபாரம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

பதிப்பித்தது.

1922 [விலை அணா 6.

Excelsior Press Madura.

TS
8-,4x 180
1922

# பொருள் அடக்கம்.

## நாலடியார்.

## பொருட்பால்.

### அரசியல்.

---



| அதிகாரஎண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | கல்வி | 2 |
| 2. | குடிப்பிறப்பு | 10 |
| 3. | மேன்மக்கள் | 16 |
| 4. | பெரியாரைப்பிழையாமை | 23 |
| 5. | நல்வினஞ்சேர்தல் | 30. 36 |



---

328/4'22
184384
303.003

# நாலடியார்.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்பது பழமொழி. இதில் 'நால்' என்பது நாலடியாரையும், இரண்டு என்பது இரண்டடிகளால் ஆகிய திருக்குறளையும் உணர்த்தின. 'பழகு தமிழ்ச் சொல்லருமை நால் இரண்டில்' என்றதிலும் 'நாலிரண்டு' என்பன நாலடியாரையும், திருக்குறளையும் குறித்தன. நாலடி-நான்காகிய அடிகளையுடையது; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். திருக்கோவையார், திருவுந்தியார் என்ற நூற் பெயர்களிற்போல், ஆர் என்பது இங்கும் சிறப்புணர்த்தி நின்ற விகுதி. இந்நூற்கு நாலடி நானூறு என்றும் பெயருண்டு. சுமார் 1800 வருஷங்களுக்குமுன்னிருந்த கடைச்சங்கம் மருவிய நூல்களில், இது, பதினெண் கீழ்க்கணக்கென்னும் தொகையினுள் முதலொன்றும். கீழ்க்கணக்கிலடங்கிய நூல்களின் பெயர்கள், நாலடியார். நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, லாதி, கைந்நிலை என்பன ஆம். கீழ்க்கணக் கென்பது அறம் பொருள் இன்பங்களைக் குறித்த வெண்பாக்களினால் தொகைபட ருவதாம். மேற்கணக்கு என்பது, வெண்பா, ஆசிரியப்பா லிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்ற ஐந்துவகைப் பாக்களாலும் ஐம்பது முதல் ஐந்நூறு இறுதியாக வருவதாம். அதிக அடிகளையுடைய பலவகைப் பாக்களால் வருவதால் மேற்கணக்கு ன்றும், குறைந்த அடிகளையுடைய ஒருவகைப் பாவால் வருதால் கீழ்க்கணக் கென்றும் காரணம் கூறுக.

இந் நூலின் வரலாறு, அடியிற் குறித்தவாறு கொள்ளப்படுறது. முன்னொருகால் எண்ணாயிரம் சமண முனிவர்கள் பஞ்சலத்தில் காலக்ஷேபம் செய்தற் கெண்ணி, பாண்டியநாடு ம் மன்னனாற் காப்பாற்றப்பட்டு வந்தனர். பஞ்சம்

600 008

...ங்கியதும் அவர்கள் தம் ஊருக்குச் செல்ல விடைகொடுக்குமாறு பாண்டியனை வேண்டினர். முனிவரும், தமிழ்ப் புலவருமாகிய அவர்களைப் பிரிய மனமில்லாமல் விடையளிக்கத் தாமதித்தான். அவர்கள் யாவரும் கூடிப்பேசி, சங்கேதப்படி ஆளுக்கொரு ...ட்டை எழுதி, ஆசனத்தின் கீழிட்டுச் சென்றனர். மறுநாட் காலை விஷயமுணர்ந்த பாண்டியன், பீடங்களை அப்புறப்படுத்தச் சொன்னபொழுது, அவற்றின் ஒவ்வொன்றின் கீழும் ஒவ்வொரு சீட்டிருத்தலைக் கண்ணுற்று, மனவருத்தத்தால் அவற்றை வைகை ஆற்றில் எறியும்படிக் கட்டளை யிட்டான். அவற்றுள் நானூறு பாடல்கள் நதியின் எதிர்முகம் நோக்கிச் சென்றன. அரசன் அவற்றை எடுத்து நாலடியார் என்று பெயரிட்டுப் போற்றி வைத்திருந்தான். தமிழைக் குறை கூறுபவரை, 'நீர் நாலடியாருடைய காலடியேனும் கண்டிருப்பீரோ' என்று கூறும் வழக்கால், இந் நூலின் பெருமை நன்கு விளங்கும்.

## பொருட்பால்: அரசியல்.

---

### முதல் அதிகாரம்-கல்வி.

முற் கூறியபடிக் கிடைத்த நானூறு செய்யுட்களையும் பிற்காலத்தில் தோன்றிய பதுமனார் என்னும் புலவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடு செய்தனர். முதன்முதலில் இச் செய்யுட்களை இயற்றியவர்கள் அத்தியாயப் பாகுபாடு முதலியன இன்றிச் செய்தனர். பதுமனார் அதிகாரம் ஒன்றுக்குப் பத்துப் பாடல்களை அமைக்கும் நியதியைக் கொண்டனர். இவ் விரண்டு காரணங்களாலும், இந் நூலின் சில பாடல்கள் அவ்வவ்வதிகாரத்தோடு வருந்திப் பொருத்தத் தக்கனவாய் உள்ளன.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளை யுடையது. அறத்துப்பாலானது, செல்வ நிலையாமை ஆதிய எழு அதிகாரங்களைக்கொண்ட துறவறவியல் எனவும், பொறையுடைமை முதலிய ஆறு அதிகாரங்களை அடக்கிய இல்லறவியல் எனவும் இரண்டு பிரிவாக உள்ளது. பொருட்பாலானது, அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகையியல், பன்னெறியியல் என்னும் ஏழு பிரிவுகளை யுடையது. இங்குப் பாடமாகக் குறிக்கப்பட்டவை பொருட்பாலில், அரசியலிலே கல்வி, குடிப்பிறப்பு, மேன்மக்...

ரைப் பிழையாமை, நல்லினம் சேர்தல், என்ற ஐந்து அதிகாரங்களுமே ஆகும்.

இனி, பொருட்பாலாவது, இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய பொருளினது தன்மை முதலியவற்றைப்பற்றிக் கூறும்பாகம் (பால்-பாகம்.) இது பெரும்பாலும் இல்லறத்தாருக்கே பயன்படுகின்ற நீதிகளைக்கூறும். 'மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்' என்று பிறரும் கூறியதனோடொப்ப, உலகத்திலுள்ளார் பொருள் (கல்விப்பொருள், செல்வப்பொருள்) முதலியன பெற்று, இம்மை இன்பங்களை அடைவதற்கு அரசனது குணமும் நீதியும் காரணமாதலை உட்கொண்டு, அவற்றைக்கூறவே அவற்றின் காரியமாகிய பொருளின் தன்மையைக்கூறியவாறுமென்று முதற்கண் அரசியலை வைத்தார். (அரசியல் - அரசின் தன்மை.)

## முதலாம் அதிகாரம் கல்வி.

அரசியலைக் கூறுவதினுள்ளும், மனிதராயினோர் எல்லார்க்கும் அவசியமான கல்வியை முதலில் வைத்தது யாதுபற்றியோ எனின், "கோனோக்கி வாழுங் குடியெல்லாம்" என்றதனால், அவ்வாறு வாழுங் குடிகளைச் செவ்வனே புரத்தற்கு அரசனுக்கு அறநூல், நீதிநூலுணர்ச்சி வேண்டியதாதலாலும், மற்றும், குடிகளுக்குக் கள்வர் பகைவர் முதலியோரால் கேடு ஏற்படாமற் காத்தற்குப் படைக்கலப்பயிற்சி இன்றியமையாத தொன்றாதலாலும் என்க.

கல்வி - கற்கப்படும் வித்தைகளையும், நூல்களையும் கற்றல். கல்வியானது அரசனுக்கு அத்தியாவசியமாயினும், கற்றலால் யாவர்க்கும் நன்மை உண்டாதலாலும், கல்லாமையால் இழிவும் ஒரோவழி மிகுந்த பொருட் செலவும் ஏற்படுதலாலும், அது ஏனையோரெல்லாருக்கும் வேண்டிய தொன்றேயெனக் கொள்க.

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு.

(பதவுரை) குஞ்சி அழகும் - தலைமயிரின் அழகும், கொடும்தானை கோடு அழகும் - மடிப்புள்ள ஆடையின் கரை அழகும், மஞ்சள் அழகும் - கலவைச் சந்தனத்தின் அழகும், அழகு அல்ல - (ஒருவனுக்கு) அழகு ஆகாவாம். நெஞ்சத்து - மனதினிடத்து, யாம் நல்லம் என்னும் -

நாம் நல்லவர் என்று காண்கிற, நடுவு நிலைமையில் - பக்ஷபாதக மில்லாத நிலைமையில், கல்வி அழகே அழகு - கல்வியினால் உண்டான அழகே அழகாகும்.

தலைமயிரின் அழகும், ஆடைகளின் அழகும், கலவைச் சந்தனத்தைப் பூசுவதால் உண்டான அழகும் ஒருவனுக்கு அழகாகமாட்டா; ஆனால் கல்வி அழகே சிறந்த அழகு என்பதாம். ஏனெனில், குஞ்சி முதலியவற்றால் மற்றவர்களே மெச்சுவார்கள், ஆனால் கல்வி தன் மனதுக்கும் இன்பம் தருவதால் என்க. கல்வியானது ஆண் பெண் ஆகிய இருபாலர்க்கும் முக்கியமென்பதை ஆண்களுக்குரிய குஞ்சியைமுதலிலும், பெண்களுக்குரிய மஞ்சளைக் கடைசியிலும் வைத்துக் கூறியதால் விளக்கினர் என்றும் கூறலாம். குஞ்சி - ஆண்களுடைய தலை முடி. சிகை, கேசம் முதலியனவும் இப்பொருளனவே. கூந்தல், கோதை, ஓதி என்பன பெண்களுடைய தலைமயிரை உணர்த்தும் மொழிகள் என அறிக. நல்லம் - குறிப்பு வினைமுற்று, அம் - விகுதி. (1)

இம்மை பயக்குமால்; ஈயக்குறை வின்றால்;
தம்மை விளக்குமால்; தாமுளராக் கேடின்றால்;
எம்மை உலகத்தும் யாம்காணோம்; கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

(ப-ரை) இம்மை பயக்கும - இப்பிறப்பில் மனிதர் அடைகின்ற எல்லா இன்பங்களையும் கொடுக்கும்; ஈயக்குறைவு இன்று - (பலர்க்குக்) கொடுத்தாலும் குறைவுபடுதல் இல்லை; தம்மை விளக்கும் - தங்களது (கற்றோரது) உண்மைத்தன்மையைத் தெளிவாக உணர்த்தும்; தாம் உளர் ஆ கேடு இன்று - தாங்கள் (இவ்வுலகில்) உள்ளவராக வாழுமட்டும் (தமக்கு வருகின்றதாகிய) துன்பம் இல்லை; (ஆதலால்) யாம் - நாம், எம்மை உலகத்தும் - எத்தன்மையான உலகத்திலும், கல்விபோல் - கல்வியைப்போல், மம்மர் அறுக்கும் மருந்து - (அறியாமையாகிய) மயக்கத்தைக் கெடுக்கின்ற மருந்தை, காணேம் - காண்போமில்லை. ஆல் மூன்று வருவன-அசைகள். நான்காவது 'ஆல்' ஆதலால் என்பதன் விகாரம்.

கல்வியானது (செல்வத்தைப்போலவே) இப்பிறப்பின் இன்பங்களைக் கொடுக்கும்; பலர்க்கும் கொடுத்தாலும் (மேன்மேலும் வளருவதன்றிக் குறைதல் இல்லை; (அன்றியும் தங்களுடைய மெய்யான தன்மையை உணர்த்தும்; தாங்களுள்ளமட்டும் தங்களுக்குத் துன்பம் (அக்கல்வி யறிவால்) இல்லையாகும். ஆதலால், நாம், எப்படிப்பட்ட உலகத்திலும் கல்வியைப் போல (அறியாமையாகிய) மயக்கமொழிக்கின்ற மருந்தைக் காண்போமில்லை என்பதாம்.

'இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்' என்றமையால் கல்வியைப் பொருட்செல்வத்தோடு ஒருவாறு ஒப்பிட்டுக்கூறி, அவையன்றியும் மனி

தர் கல்வியால் அறிவுபெற்று, ஆத்ம விசாரணை செய்து, வீடுபெறலாமென்றும், மேலும் அவர்கள் அறிவினால் தமக்குத் துன்பம் வராமல் செய்து கொள்ளலாமென்றும், வந்தாலும் அதை விலக்கும் உபாயமறிந்து விலக்கிக் கொள்ளலாமென்றும் கூறுவார், "தம்மை விளக்குமால் தாமுளராக்கேடின்றால்" என்றுங்கூறிச் செல்வத்தைக்காட்டிலும் கல்விக்குள்ள மேம்பாட்டை எடுத்துக்காட்டினார். (2)

களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

(ப-ரை) களர் நிலத்து-(ஒன்றும் விளையாத) உவர் நிலத்தில், பிறந்த-உண்டாகிய, உப்பினை-உப்பை, சான்றோர் - பெரியோர்கள், விளைநிலத்து நெல்லின் - விளைகின்ற (செழிப்பான) நிலத்தில் உண்டாகிற நெல்லைப் போல், விழுமிது ஆ கொள்வர்-சிறந்ததாகக் கொள்வார்கள்; (அதுபோல) கடைநிலத்தோர் ஆயினும் - மிகவும் தாழ்ந்த ஜாதியிற் பிறந்தவர்களானாலும், கற்று அறிந்தோரை - (நல்ல நூல்களைக்) கற்று உணர்ந்தவர்களை, தலை நிலத்து வைக்கப்படும் - உயர்ந்த இடத்தில் வைத்து மேன்மைப் படுத்தவேண்டும்.

(ஒன்றும் விளையாத) உவர் நிலத்தில் உண்டாகிய உப்பைப் பெரியோர்கள், (எல்லாப் பொருள்களும்) விளையத்தக்க செழிப்பான நிலத்தில் உண்டாகிய நெல்லைப்போல் சிறந்ததாகக் கொள்வார்கள்; அதுபோல், இழிந்த ஜாதியாராயினும், கற்றுணர்ந்தவர்களை உயர்ந்த இடத்தில் வைத்து மேன்மைப்படுத்துவார்கள் என்பதாம்.

பெரியோர் ஒருவனது குடிப்பிறப்பால் உயர்வு தாழ்வு கூறாது, அவனது கல்வியறிவைக்கொண்டே அவனை நன்கு மதிப்பர் என்பது கருத்து. இழிந்த ஜாதியினராயினும் கல்விச்சிறப்பால், தாழ்ந்த நிலத்தில் உண்டாகிய உப்பைப்போல் மேன்மை பெறுவர் என்று பொருள் படுதலால், இது எடுத்துக் காட்டுவமையணி - விளை நிலம் - வினைத்தொகை நிலைத் தொடர். "விழுமிது ஆக" என்பதில் 'க' கரம் தொக்கது. (3)

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின் வவ்வார்
எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

(ப-ரை) வைப்பு உழி கோள்படா - வைக்கப்பட்ட இடத்தில் (கள்வரால்) கொள்ளப்படமாட்டா; வாய்த்து ஈயில் கேடு இல்லை - (கொள்பவர்கள்) வாய்த்து (அவர்களுக்குக்) கொடுத்தால் (அதனால்) குறைபடுதல்

இல்லை; மிக்க சிறப்பின் அரசர் - மிகுந்த சிறப்பினையுடைய அரசர்கள்; செறின் - கோபித்தாலும்; வவ்வார் — (பலாத்காரமாகக்) கொள்ளமாட்டார்கள்; ஒருவன் —, எச்சம் என— ஆஸ்தியென்று, மக்கட்குச் செய்வன— (தன்) மக்களுக்குக் கொடுக்கத்தகுவன, விச்சை - கல்விகளே யாம்; பிற அல்ல - மற்றைச்செல்வப்பொருள் அல்ல; மற்று - அசை.

(கல்விப்பொருள்கள் செல்வப்பொருள்களைப்போல்) வைக்கப்பட்ட இடத்தில் (கள்வரால்) கொள்ளப்படமாட்டா; ஏற்போர்கள் கிடைத்து அவர்களுக்குக் கொடுத்தால் குறைவு படுதல் இல்லை; மிகுந்த சிறப்பினையுடைய அரசர்கள் கோபித்தாலும், (கல்வி எடுத்துக்கொள்ளலாவதோர் வெளித்தோன்றும் பொருளல்லவாதலால்) பலாத்காரமாகக் கொள்ள மாட்டார்கள்; இவைபற்றி, ஒருவன் ஆஸ்தியாகத் தன் மக்களுக்குக் கொடுக்கத்தகுவன கல்விப்பொருள்களே; மற்றைச் செல்வப்பொருள்கள் அல்ல என்பதாம்.

கோள் - கொள்ளல்; முதனிலை திரிந்த தொழிற்பெயர்; "வாய்த்தீயிற் கேடில்லை" என்பதை இவ்வதிகாரத்து இரண்டாம் பாட்டில் "ஈயக்குறைவின்றால்" என்பதனோடு ஒப்பிட்டுப்பார்க்க. கேடு - 'கெடு' என்பதன் முதல் நீண்டது. எச்சம் - ஒருவனுடைய சம்பாத்தியத்தில் அவன் செலவழித்ததுபோக (அவன் மக்களுக்கு) எஞ்சி நிற்பது; பிதிரார்ஜிதம். வவ்வார் - இது 'வௌவார்' எனவும் வரும். விச்சை - வித்தை என்ற வடமொழியின் திரிபு. 'கேடில்விழுச் செல்வங் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றையவை' என்ற திருக்குறளும் இப்பாட்டின் கருத்தையே கொண்டது. (4)

கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே; நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

(ப-ரை) கல்வி கரையில-வித்தைகளாகிய கடல்களுக்குக் கரையில்லை; கற்பவர் நாள் சில - (அவைகளைப்) படிப்பவர்களது வாழ் நாட்கள் சிலவேயாம்; மெல்ல நினைக்கில் பிணிபல - நன்றாக யோசித்துப் பார்த்தால் (சிலவாகின்ற வாழ்நாட்களில் மனிதரைத் துன்புறுத்தும்) வியாதிகள் பல; தெள்ளிதின் ஆராய்ந்து - தெளிவாக ஆராய்ந்து, நீர் ஒழிய பால் உண் குருகின் தெரிந்து - நீர் (தனியாக) ஒழிய (அதனை வேறு பிரித்துப்) பாலை மாத்திரம் அருந்துகின்ற அன்னப் பறவையைப்போலக்(கொள்ளத்தக்கவை இவை, தள்ளத்தக்கவை இவை என) அறிந்து, அமைவு உடைய கற்பவே (கற்கப்படும்) மேன்மை பொருந்திய நல்ல நூல்களைப் படிப்பார்கள்.

வித்தைகளுக்கு (இவ்வளவே என்று வரையறுக்கப்பட்ட) ஓரெல்லை யில்லை; கற்பவர்களுடைய வாழ்நாட்கள் சிலவேயாம்; தீர்க்கா[illegible] ஆலோ

சித்துப் பார்த்தால் (மனிதனைத் துன்புறுத்தும்) வியாதிகள்பல; ஆதலால் (அறிவாளிகள்) தெளிவாக ஆராய்ந்து, நீர் தனியாக ஒழிய (அதனை வேறு பிரித்துப்) பாலைமாத்திரம் அருந்துகின்ற அன்னப் பறவையைப்போல், (கற்கத்தக்கனவற்றைப்) பகுத்தறிந்து, மேன்மைபொருந்திய நல்ல நூல்களையே படிப்பார்கள் என்பதாம்.

'கல்வி கரையில' என்றமையால், கல்வி ஒரு கடலுக்கு ஒப்பிட்டது உய்த்துணரப்படும். 'சில' என்பது ஓரளவுக்குட்பட்டது என்று பொருள் படும். 'பல' என்பது 'ஒரு பொழுதும் வாழ்வதறியார் கருதுப, கோடியு மல்ல பல' என்ற விடத்துப்போல, மிகுதியைக்குறித்து நின்றது. 'அமை வுடைய' என்றது 'அறம் பொரு ளின்பம் வீடென்னும் உறுதிப் பொருள் உணர்த்துவன' வாகிய நூல்களை. 'குருகு' என்னும் பறவைப்பொதுப்பெயர் இங்கு அன்னப்பறவையை உணர்த்திற்று. 'குருகின்' - என்றதில் உள்ள 'இன்' உருபு ஒப்புப்பொருளில் வந்தது. நீரையும் பாலையும் கலந்து வைத்தால் நீரைப்பிரித்துப் பாலை உண்ணுவது அன்னத்திற்கு இயல்பு என்பது முன்னோர் துணிபு. இதனை, 'நீர்பிரித் தன்னமுன்னும், தூயதீம் பால் போற் கோள்க' என்று திருவிளையாடற் புராணத்துப், பரஞ்சோதியார் கூறுவதனாலும், பிறவாற்றானும் அறிக. (5)

தோணி யியக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்;—காணுய்
அவன்துணையா ஆறுபோயற்றேநூல் கற்ற
மகன்துணையா நல்ல கொளல்.

(ப-ரை) (தாழ்ந்த ஜாதியிற் பிறந்தவனாயினும்) நூல்கற்ற மகன் துணையா - (பல) நூல்களையும் கற்ற மனிதன் துணையாக, நல்ல - நூல்களிலுள்ள சிறந்த பொருள்களை, கொளல்-(அறிந்து) கொள்ளுதல், தோணி இயக்குவான் - ஓடத்தைச் செலுத்துபவன், தொல்லை வருணத்து-பழமையான ஜாதிகளுள், காணில் - (ஆராய்ந்து) பார்த்தால், கடைப்பட்டான் என்று இகழார் - மிகவும்தாழ்ந்த ஜாதியினன் என்று (அவனை) இகழாதவர்களாய், அவன்துணையா ஆறுபோயற்று - அவனே துணையாக ஆற்றைக்கடந்து (அப்புறம்) போனாற் போன்றது. காணுய், ஏ, அசைகள்.

பலநூல்களையும் கற்றுணர்ந்தவன் எக்குலத்தானாயினும் அவனே துணையாக நூல்களிலுள்ள சிறந்த பொருள்களை அறிந்து கொள்ளுதல், ஆராய்ந்து பார்த்தால், ஓடம் செலுத்துபவன் பழமையான ஜாதிகளுள் இழிந்த ஜாதியினன் என்று அவனை இகழாதவர்களாகி, அவனே துணையாக ஆற்றைக்கடந்து அப்புறம்போனாற் போன்றது என்பதாம். இயக்கு வான், நல்ல, என்பன வினையாலணையும் பெயர்கள். இகழார் - முற்றெச்சம். (6)

தவலரும் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பாம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி.

(ப-ரை) தவல் அரு-பிழைத்தல் இல்லாத, தொல் கேள்வித் தன்மை உடையார் - பழமையான நூல்களைக் கேட்ட கேள்விப் பெருமை உடையவர்கள், இகல் இலர் எஃகு உடையார் - பகை (விரோதம்) இல்லாதவர்கள், புத்திக்கூர்மையுடையவர்கள் ஆகிய கற்றவர்கள், தம்முள் குழீஇ நகலின் - தங்களுக்குள் கூடியிருந்து (தாம்தாம் கற்றவைகளைச் சொல்லி) சந்தோஷமடைவதைப் பார்க்கிலும், இனிது ஆயின் - இன்பந் தரத்தக்கதானால், அகல்வானத்து உம்பர் உறைவார் பதி - அகன்ற வானவுலகத்தின் மீது வசிக்கின்ற தேவர்களுடைய நகரமாகிய அமராவதியை, காண்பாம் - (நாம் இனிச்சென்று) காண்போம்

சிறந்த கேள்வியறிவை உடையவர்கள், பகையில்லாதவர்கள் புத்திக்கூர்மை யுடையவர்கள் ஆகிய தங்களுக்குள் கூடியிருந்து (தாம் கற்றவைகளைச் சொல்லி) ஆநந்திப்பதைக் காட்டிலும் மேலான இன்பந்தருவதாயின், பரந்த வானுலகத்தின்மீது வசிக்கின்ற தேவர்களுடைய நகரமாகிய அமராவதியை நாம் இனிச்சென்று காண்போம் என்பதாம். சுவர்க்கலோகத்து இன்பம், கற்றவர்களுடைய சபையில் ஒருவன் அடையும் இன்பத்தைப் பார்க்கிலும் மிக்கதன்று என்றபடி. எஃகு - கூர்மை; இங்கு புத்திக்கூர்மை. குழீஇ - உயிரளபெடை. (7)

கனைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்பு தின்றற்றே;—நுனிநீக்கித்
தூரின் தின்றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு.

(ப-ரை) கனைகடல் தண்சேர்ப்ப-சப்திக்கின்ற கடலினது குளிர்ச்சியான துறையையுடையவனே, கற்று அறிந்தார் கேண்மை - (நல்ல நூல்களைக்) கற்று உணர்ந்தவர்களுடைய சிநேகமானது; நுனியின் கரும்பு தின்று அற்று - நுனியிலிருந்து (அடிநோக்கிக்) கரும்பைத்தின்றாற்போன்றது; பண்பு இலா - நற்குணமில்லாத, ஈரம் இலாளர் தொடர்பு - அன்பில்லாதவர்களுடைய சிநேகமானது, நுனிநீக்கித் தூரின்தின்று அன்ன தகைத்து - நுனியைவிட்டு அடியிலிருந்து (அக்கரும்பை) தின்றாற்போன்ற தன்மையையுடையது. அரோ - அசை.

சப்திக்கின்ற கடலின் குளிர்ச்சியான துறையையுடையவனே, கற்றுணர்ந்தவர்களுடைய சிநேகம் நுனியினின்று கரும்பை அடிநோக்கித் தின்றாற்போன்றது (வரவரச் சுவை அதிகரிக்கும்;) (நல்ல நூல்களைக்

சுவைக்கல்லாத, நற்குணமில்லாத, அன்பில்லாதவர்களுடைய சிநேகம், அக்கரும்பின் நுனியைவிட்டு அடியிலிருந்து நுனிநோக்கித் தின்றாற்போன்றது - (சுவை, வரவரக்குறையும்) என்பதாம். 'சுவை' - வினைத்தொகை. இலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (8)

கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந் தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

(ப-ரை) தொல்சிறப்பின் ஒள்நிறப்பாதிரிப்பூ - பழமையான சிறப்பையும் பிரகாசமான நிறத்தையும் உடைய பாதிரிமரத்தின் பூவை, சேர்தலால் - அடைதலால், புத்தோடு (அப்பூவின்) புதிய இதழானது தண்ணீர்க்கு - குளிர்ச்சிபொருந்திய நீருக்கு, தான் பயந்து ஆங்கு - தான் (வாசனையைக்) கொடுத்தாற்போல, கல்லாரே ஆயினும் - (தாம்) படியாதவர்களே ஆனாலும், கற்றாரைச் சேர்ந்து ஒழுகின் - படித்தவர்களை அடுத்து (அவர்களைப்போல்) நடந்தால், நல் அறிவு நாளும் தலைப்படுவர் - நல்ல அறிவு தினந்தோறும் உண்டாகப்பெறுவர்.

(இயற்கையாக மணமொன்றுமில்லாத) தண்ணீரானது பாதிரிப்பூவை அடைவதால், அது அப்பூவிதழின் வாசனையை யடைவதுபோல், படியாதவர்களும் படித்தவர்களை அடுத்து அவர்கள்வழி நடந்தால், தாங்களும் அவர்களது நல்லறிவைத் தினந்தோறும் (அதிகமாகப்) பெறுவார்கள் என்பதாம். கற்றார் - வினையாலணையும் பெயர். புத்தோடு - புதுமை தோடு. (9)

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா(து)
உலகநூ லோதுவ தெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

(ப-ரை) அலகுசால் கற்பின் - எண்ணிக்கை மிகுந்த வித்தைகளுக்குள்ளே, அறிவு நூல்கல்லாது - (மெய்) அறிவைத்தருகின்ற நூல்களைப் படியாமல், உலகநூல் ஓதுவது எல்லாம் - இவ்வுலகத்துக்கான நூல்களைப் படிப்பது முழுதும், கலகல கூஉம்துணை அல்லால் - கலகலவென்று கூவுமளவேயல்லாது, கொண்டு - (அவற்றைக்) கொண்டு, தடுமாற்றம் போஒம் துணை அறிவார் இல் - (அறியாமையாகிய) மயக்கம் நீங்குதற்கு வேண்டிய அளவு அறிபவர்கள் இல்லை.

மெய்யறிவைத்தருகின்ற ஞானநூல்களைப் படியாது இவ்வுலகத்துக்கடுத்த நூல்களைப்படிப்பதெல்லாம் (பறவைகள் போல்) கலகலவென்று கூவுமளவேயல்லாது, அவற்றைக்கொண்டு (அறியாமையாகிய) மயக்கம்

நீங்குதற்கு வேண்டிய அளவு அறிபவர் இல்லை என்பதாம். கலகல-இரட்டைக்கிளவி. கூம், போம், என்பன அளபெடுத்து கூஉம் போஒம் என்றாயின. கற்பு - தொழிற்பெயர். (10)

## இரண்டாம் அதிகாரம்—குடிப்பிறப்பு.

குடிப்பிறப்பு - உயர்குலத்தில் பிறத்தலின் மேன்மையை உணர்த்துவது. கல்விகேள்விகள் உயர்குடிப்பிறந்தார்க்குப் பெரிதும் அமைதலின் இவ்வதிகாரம் கல்வியின் பின் வைக்கப்பட்டது. அன்றியும், கல்வி இழிந்த குலத்திற் பிறந்தவனையும் உயர்த்துமாகலின் இங்ஙனம் அதிகாரம் அமைந்ததெனினுமாம்.

உடுக்கை யுலறி யுடம் பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்;
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று.

(ப-ரை) இடுக்கண்தலை வந்தக்கண்ணும் -(பசித்) துன்பம் அதிகமாய் உண்டான பொழுதும், அரிமா - சிங்கமானது, கொடிப்புல் கறிக்குமோ- கொடிபோற் படர்ந்திருக்கும் புல்லைக்கடிக்குமோ (கடிக்காது); (அதுபோல,) உடுக்கை உலறி உடம்பு அழிந்தக்கண்ணும் - உடுத்த வஸ்திரம் கெட்டு, உடம்பானது மெலிந்து அழிந்தபோதும், குடிப்பிறப்பாளர் - (உயர்ந்த) குடிப்பிறப்பை யுடையவர்கள், தம் கொள்கையில் குன்றார் - தங்களுடைய கொள்கையில் குறைவுபடார். மற்று - அசை.

சிங்கம் தனக்குப் பசியிருந்தபோதும் புல்லைத் தின்னாததுபோல், உயர் குடியிற் பிறந்த பெரியோர்கள் தங்களுக்கு உண்ண உணவின்றி உடம்பு மெலிந்து உடுக்க வஸ்திரமில்லாமல் இருக்கும் மிகுந்த தரித்திரத்தை அடைந்த காலத்தும், தங்களுடைய ஒழுக்கத்தில் குறைவுபடமாட்டார்கள் என்பதாம். 'கண்ணும்' என்பதில் உள்ள 'உம்' இழிவு சிறப்பின்மேல் நின்றது. 'கறிக்குமோ' - ஈற்று 'ஓ' காரம் எதிர்மறைப் பொருள் தந்துநின்றது. 'புலி பசித்தால் புல்லைத்தின்னுமோ' என்பது பழமொழி. உடுப்பது - உடுக்கை: வஸ்திரம - தொழிலாகு பெயர். (1)

சான்றாண்மை சாய லொழுக்கம் இவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்றோயும்
மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

(ப-ரை) வான்தோயும் மைதவழ் வெற்ப - ஆகாயத்தைத் தொடுகின்ற மேகங்கள் தவழ்கின்ற மலைகளையுடைய அரசனே! சான்றாண்மை - நற்குணங்கள் நிறைந்திருக்கும் தன்மையும், சாயல் - (ஒ)தக்குலண்டா

கிற) மேன்மையும், ஒழுக்கம் இவை மூன்றும் - நல்லொழுக்கமும் ஆகிய இவை மூன்றும், வான்தோய் குடிப்பிறந்தார்க்கு அல்லது - புகழால் வானத்தைத் தொடும்படி உயர்ந்த குடியிற் பிறந்தவர்களுக்கு அல்லாமல், பெருஞ்செல்வம் எய்தியக்கண்ணும்-மிகுந்த ஐசுவரியம் உண்டானபோதும், பிறர்க்கு - மற்றவர்களுக்கு, படாஅ - உண்டாகமாட்டா.

நற்குண நிறைவும், மேன்மையும், நல்லொழுக்கமும் ஆகிய இவை உயர்குடிப் பிறந்தவர்க்கல்லாமல், மற்றவர்க்கு ஏற்படாது என்பதாம்.

'வான்றோய்குடி' - 'வானுயர் தோற்றம்' என்ற விடத்துப்போல, வானம்போலுயர்ந்த குடி என்று பொருள்படும். (2)

இருக்கை யெழலு மெதிர் செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்று வொழுக்கமாக் கொண்டார் கயவரோ(டு)
ஒன்று வுணரற்பாற் றன்று.

(ப-ரை) இருக்கை எழலும் - (பெரியோரைக் கண்டவிடத்து)தமது ஆசனத்தைவிட்டு எழுந்திருத்தலும், எதிர் செலவும்-(அவர்களை அழைத்து வருவதற்காக) எதிர்கொண்டு செல்லுதலும், ஏனை - மற்றும், விடுப்ப - (அவர்கள் திரும்பிப்போகும் போது) வழிவிட, ஒழிதலோடு - (அவர்கள் போவென்று சொல்ல அவரைவிட்டுப்) பிரிதலோடு, இன்ன- இவை போன்ற உபசாரங்களை, குடிப்பிறந்தார் - உயர்ந்தகுடியிற் பிறந்தவர்கள், குன்று ஒழுக்கமாக்கொண்டார் - குறைவுபடாத நல்லொழுக்கமாகக் கொண்டார்கள்; கயவரோடு-(அத்தகைய நல்லொழுக்கமில்லாத) கீழ்மக்களோடு, ஒன்று - (நல்லொழுக்கமுடைய குடிப்பிறந்தாரை) ஒரே தன்மையாக, உணரல்பாற்று அன்று - பாவிக்கத்தக்கது அன்று.

நற்குடியிற் பிறந்தவர்கள், (பெரியோர்களைத் தம்மிடத்து வரக்கண்ட பொழுது,) தமது ஆசனத்தைவிட்டெழுதலும், (அவர்களை) எதிர் கொண்டு செல்லுதலும், மற்றும், வழிவிடுதலும், (அவர்கள் விடைகொடுத்தபின் அவரை விட்டு) நீங்குதலும் ஆகியவற்றோடு இவைபோன்ற பிற உபசாரங்களைக் குறைவுபடா ஒழுக்கமாகக் கொள்வார்கள்; ஆதலால், (இத்தகைய நல்லொழுக்கமில்லாத) கீழ்மக்களோடு (குடிப்பிறந்தாரை) சமானமாக நோக்கக்கூடாது என்பதாம். எழல், செலவு, ஒழிதல்-தொழிற் பெயர்கள். பாற்று-பான்மை என்னும் சொல்லினடியாகப் பிறந்த ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. (3

நல்லவை செய்யின் இயல்பாகும்; தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும்; எல்லாம்
உணரும் குடிப்பிறப்பின் ஊதியம் என்னே
புணரு மொருவர்க் கெனின்.

(ப-ரை) நல்லவை செய்யின் - (உயர்குடியிற் பிறந்தவர்கள்) நல்ல கருமங்களைச் செய்தால், இயல்பாகும் - (அது அவர்களுக்கு) இயற்கைக் குணமாகும் (என்பர்); தீயவை - (அவர்கள் செய்யும்) கெட்ட காரியங்கள், பல்லவர் தூற்றும் பழி ஆகும் - பலரும் தூற்றுகின்ற பழிப்புக்கு இடமாகும்; ஒருவர்க்குப் புணரும் எனின் - ஒருவனுக்குக் குடிப்பிறப்பு நல்வினை வசத்தால் வந்து சேரும் என்றால், எல்லாம் உணரும் குடிப்பிறப்பின் - (அவை) எல்லாம் அறிந்து நடப்பதற்கு ஏதுவான நற்குடிப்பிறப்பைக் காட்டிலும், ஊதியம் என் - (பெறலாவதோர்) இலாபம் என்ன? (ஒன்றுமில்லை) ஓ - அசை.

(நற்குடியிற் பிறந்தவர்கள்) நல்ல காரியங்களைச் செய்தால், (அது அவர்களுக்கு) இயல்பாகும் (என்று புகழுவர்;) அவர்கள் செய்யும்) தீய காரியங்கள் பலரும் தூற்றுகின்ற பழிச்சொல்லுக்கிடமாகும்; ஆதலால், ஒருவனுக்கு (குடிப்பிறப்பு, நல்வினை வயத்தால்) வந்து பொருந்துவதாயின், அவையெல்லாம் அறிந்து நடத்தற்கேதுவான நற்குடிப்பிறப்பைக் காட்டிலும் (பெறலாவதோர்) இலாபம் வேறொன்றுமில்லை என்பதாம். (4)

கல்லாமை யச்சம்; கயவர் தொழிலச்சம்;
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்;—எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை யச்சம்; மரத்தாரிம்
மாணக் குடிப்பிறந் தார்.

(ப-ரை) கல்லாமை அச்சம் - (உயர்ந்த குடியிற் பிறந்தவர்களுக்கு) படியாத தன்மை அச்சத்தைத்தருவது; கயவர் தொழில் அச்சம் - கீழோரது (இழிந்த) தொழில் (செய்வது) அச்சத்தைத்தருவது; சொல்லாமையுள்ளும் சோர்வு அச்சம் - (தீயசொற்களைச்) சொல்லாவிடத்தும் (அவை சொல்லுதற்கு வேறு காரணமாகிய) மறதி அச்சத்தைத்தருவது; எல்லாம் இரப்பவர்க்கு ஒன்று ஈயாமை அச்சம் - (தமக்கு வேண்டிய எல்லாப்பொருள்களையும் (பிறரிடம்) யாசித்து வாழுபவர்களுக்கு ஒன்றும் கொடுக்கமுடியாத வறுமை அச்சத்தைத்தருவது. இம்மாணக் குடிப்பிறந்தார் - இப்படிப்பட்ட (நற்குணங்களையுடைய) பெருமையில்லாத (தாழ்ந்த) குடிப் பிறந்தவர்கள், மரத்தார் - மரத்தைப்போன்றவர்கள்.

(உயர் குடியிற் பிறந்தவர்களுக்கு) படியாமையும், கீழ்மக்களது தாழ்ந்த தொழிலைச் செய்வதும், (தீய சொற்களைச்) சொல்லாத நியமமிருந்தவிடத்தும் (அதை மறந்து சொல்லும்) மறதியும், (தமக்கு வேண்டுவன) எல்லாவற்றையும் இரந்து உயிர் வாழ்பவர்களுக்கு ஒரு பொருளும் கொடுக்க இயலாத தரித்திரமும் (இடைவிடாது) அச்சத்தை விளைப்பன. (ஆதலால் அவர்கள் அவற்றை அஞ்சிக்காப்ப ரென்றவாறு;) (அவற்றால் விளையும் இழிவை அஞ்சிக்காக்கும்) இப்படிப்பட்ட பெருமையில்லாத குடி

யிற் பிறந்தவர்கள் (அஞ்சத்தக்கன வற்றுக்கு அஞ்சாத அற்ப அறிவை யுடையவராதலால்) மரத்தோ டொத்தவர்கள் ஆவார்கள். என்பதாம்.

'ஒன்று' - என்பதில் இழிவு சிறப்பும்மைத்தொக்கது. ஈயாமை - கொடுக்கமுடியாத தரித்திரம் மிக்க நிலைமை. சான்றோர் இரப்போர்க்கு ஒன்றும் கொடுக்கமுடியாத தமது வறுமைக் கஞ்சித்தளர்வர். இதனை 'அந்நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்' என்று குமணன் இரங்கிய தனாலும், நின்றைக் காளத்தி வள்ளல் சரித்திரத்தினாலும் அறிக. (5)

இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாம்—கனமணி
முத்தோடி மைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப!
இற்பிறந்தார் கண்ணே யுள.

(ப-ரை) கனம்மணி - திரளான இரத்தினங்கள், முத்தோடு - முத்துக்களுடன், இமைக்கும் - பிரகாசிக்கின்ற, முழங்கு உவரி தண் சேர்ப்ப - சப்திக்கின்ற கடலின் குளிர்ச்சியான கரையை யுடையவனே, இன நன்மை - சகவாச நலமும், இன்சொல் - இனிய சொற்களைச் சொல்லும் தன்மையும், ஒன்று ஈதல் - (இரந்தவர்களுக்கு ஒளிக்காமல் தம்மிடத்துள்ள) ஒன்றைக் கொடுத்தலும், ஏனை - மற்றும், மனநன்மை என்று இவை எல்லாம் - மனத்தின் பரிசுத்தமான தன்மையும் ஆகிய இவை யெல்லாம், இல்பிறந்தார் கண்ணே உள - உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்தே இருப்பனவாம்.

நல்லோருடைய சகவாசமும், இன் சொற் சொல்லுதலும், இரந்தோர்க் கொன்றைக் கொடுத்தலும், மனத்தூய்மையும் இவை யெல்லாம் உயர் குடியிற் பிறந்தவர்களுக்கு உள்ள குணங்கள் என்க. மற்று - அசை. உவரி. உப்பைத் தன்னிடத்துடைய கடல்.

'கண்ணே' என்பதன் ஈற்றேகாரம் பிரிநிலைப் பொருளது. (6)

செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகும்;
எவ்வமுழந்தக் கடைத்தும் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

(ப-ரை) செய்கை அழிந்து-(அழகு பெறும்படியாகச்செய்த) செய்கைகள் (சித்திரங்கள் முதலியன) கெட்டு, சிதல் மண்டிற்று ஆயினும் - கறையான் அடர்ந்திருந்ததாயினும், பேர்இல் - பெரிய வீடானது, பெய்யா ஒரு சிறை உடைத்து ஆகும் - (நீர்) ஒழுகாத ஓரிடத்தை உடையதாகும். குடிப்பிறந்தார் - உயர் குடிப்பிறந்தார், எவ்வம் உழந்தக் கடைத்தும் - துன்பமுற்ற பொழுதும், செயற்பாலவை செய்வர் - செய்யத்தக்க காரியங்களை (நழுவவிடாமல்) செய்வார்கள்.

அழகுகெட்டுக் கறையான் அடர்ந்திருந்த தானாலும், ஒரு பெரிய வீடானது நீரொழுகாத ஓரிடத்தை உடையதாகும், (அத்தன்மைபோல்)

மிகவும் துன்பமுற்ற பொழுதும், உயர்குடியிற் பிறந்தவர்கள் செய்யத்தக்க காரியங்களை விடாமற் செய்வார்கள் என்பதாம். எடுத்துக்காட்டுவமை அணி. (7)

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
யங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போற்
செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார்.

(ப-ரை) ஒரு புடைபாம்பு கொளினும் - ஒரு பாகத்தைப் பாம்பு விழுங்கினாலும், ஒரு புடை அம்கண்மா ஞாலம் - ஒரு பாகத்தால் அழகிய இடத்தையுடைய பெரிய பூமியை, விளக்குறூஉம் திங்கள்போல் - விளக்குகின்ற சந்திரனைப்போல், குடிப்பிறந்தார் - நற்குடிப் பிறப்பையுடையவர்கள், செல்லாமை செவ்வன்நேர் நிற்பினும் - வறுமையானது செவ்வையாக (தமக்கு) எதிரில் வந்து நின்றாலும், ஒப்புரவிற்கு ஒல்கார் - (செய்ய வேண்டிய) முறைமையுடையனவற்றைச்செய்வதற்குத் தளரமாட்டார்கள்.

தனது ஒரு பாகத்தைப் பாம்பு விழுங்கினாலும், மற்றொரு பாகத்தால் பெரிய உலகத்தைப் பிரகாசிப்பிக்கின்ற சந்திரனைப்போல்; உயர்குடிப் பிறப்பையுடையவர்கள், தாம் மிகுந்த தரித்திரத்தை அடைந்த காலத்தும் செய்யவேண்டியனவற்றைச் செய்வதற்குத் தளரமாட்டார்கள் என்பதாம். கிரகணகாலத்தில், சந்திரனை ராகுவென்னும் பாம்பு பற்றி விழுங்குகிற தென்பது புராணக்கூற்று. செல்லாமை - வறுமை; (இவ்வுலக வாழ்க்கை நடத்தற் கேற்ற பொருளில்லாத தன்மை.) "உயிருடம்பினீக்கியாரென்ப செயிருடம்பிற் செல்லாத்தீ வாழ்க்கையவர்" என்ற விடத்தும், "செல்லா" என்பது இப்பொருள்படுதலை யறிக. "இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார், கடனறி காட்சி யவர்" என்ற திருக்குறளும் இப்பாட்டின் கருத்தையே கொண்டது. (8)

செல்லா விடத்தும் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்தும் செய்யார் சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரண் ஆற்றுதல் இன்று.

(ப-ரை) செல்லா இடத்தும் - வறுமை கூர்ந்த சமயத்திலும், குடிப் பிறந்தார் செய்வன - மேன்மக்கள் செய்யும் தருமச்செயல்களை, சிறியவர் செல் இடத்தும் செய்யார் - கீழ்மக்கள் (தமது மனம்போற்) செய்யக் கூடிய செல்வமுள்ள காலத்திலும் செய்யமாட்டார்கள்; புல்வாய் - மானானது, பருமம் பொறுப்பினும் - கல்லணை (முதலியவை) தாங்கி நின்றாலும், பாய் பரிமாபோல் - பாய்கின்ற குதிரையைப்போல், பொருமுரண் ஆற்றுதல் இன்று - தாக்குகின்ற போர்செய்யும் வலிமையை உடையதாதல் இல்லை.

மானனது சேணம் தாங்கி போர்க்கோலம் பூண்டாலும், பாய்ந்து செல்லுகின்ற குதிரையைப்போல் போர்செய்யும் வலிமையையுடைய தில்லை; அதுபோல், (இயற்கையில் ஈகைக்குணம் வாய்ந்த) நற்குடிப் பிறப்பாளர் தாம் தரித்திரத்தை அடைந்த காலத்தில் செய்யும் தருமச் செயல்களை, (அஃதில்லாத) கீழ்மக்கள் தமக்குச் செல்வமுள்ளகாலத்தும் செய்யமாட்டார்கள் என்பதாம்.

பருமம் - கல்லணை; குதிரைமேலிடும் சேணம். புல்வாய் - மான்; புல்லைத்தின்னும் வாயையுடையது என்று பொருள்படும். ஒப்புரவு - உலக நடையை அறிந்து அதற்குத்தக்கபடி பிறர்க்கு உதவுதல். (9)

எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார்
அற்றுத்தற்சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றாவர்
அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்.

184384

(ப-ரை) அற்றக்கடைத்தும் - (நீர்) வற்றிய காலத்திலும், அகல்யாறு அகழ்ந்தக்கால் - அகன்ற ஆறானது தோண்டினால், தெற்றென - சீக்கிரமாக, தெள்நீர் படும் - தெளிவான நீர் ஊறப்பெறும்; (அதுபோல,) குடிப்பிறந்தார்—, எற்று ஒன்றும் இல்லா இடத்தும் யாதொன்றும் இல்லாத காலத்தும், அற்று தன் சேர்ந்தார்க்கு அசை இடத்து ஊற்று ஆவர் - (யாதொரு புகலிடமும்) இல்லாமல் தம்மை யடைந்தவர்களுக்குத் தளர்வுண்டாகிய பொழுது, ஊன்றுகோல்போல உதவுவர்.

அகன்ற ஆறானது நீர் வற்றிப்போன போதும், தோண்டினால் விரைவாகத் தண்ணீர் ஊறப்பெறுவதுபோல், குடிப்பிறப்பாளர் (தமக்கென்று) யாதொரு பொருளுமில்லாத வறுமையுற்ற விடத்திலும் வேறு கதியற்றுத் தம்மையடைந்தவர்க்குத் தளர்ச்சியுண்டாகிய பொழுது ஊன்றுகோல் போல உதவுவர் என்பதாம். குடிப்பிறப்பையுடைய மேலோர்கள் தாங்கள் வறுமையடைந்த காலத்தும் யாதொரு கதியுமற்றுத் தங்களை யடைந்தவர்க்கு உதவி செய்வார்கள் என்பது கருத்து. ஊன்றுகோல் போல உதவுதல் என்னுங்கருத்து "கற்றிலனாயினுங் கேட்க வஃதொருவற் கொற்கத்தினூற்றாந் துணை" என்ற திருக்குறளிலும் அமைந்துள்ளது காண்க. "ஆற்றுப் பெருக்கற் றடிசுடு மந்நாளும், ஊற்றுப்பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு, நல்லகுடிப்பிறந்தார் நல்கூர்ந்தாராலும், இல்லையெனமாட்டா ரிசைந்து" என்னும் நல்வழிச் செய்யுளும் இப்பாட்டின் கருத்தையே கொண்டது. இவை எடுத்துக்காட்டுவமையணி பெற்றிருக்கின்றன. (10)

## மூன்றும் அதிகாரம். மேன்மக்கள்.

அதாவது, மேன்மக்களினது தன்மையைப்பற்றிச் சொல்லுதலாம்; அவர்களின் தன்மைகளாவன, குற்றத்திற்கு அஞ்சித் துன்புறுதல், பெருமை தரத்தக்கவைகளையே செய்தல் முதலியன. மேன்மக்களாவதற்குக் குடிப்பிறப்பும் ஒருகாரணமாதலால், இது குடிப்பிறப்பின் பின் வைக்கப்பட்டது.

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கள்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.

(ப-ரை) அம்கண் விசும்பின் அகல் நிலாபாரிக்கும்-அழகிய இடத்தையுடைய ஆகாயத்திலிருந்து அகன்ற நிலாவை (கிரணங்களைப்) பரப்புகின்ற, திங்களும் சான்றோரும் ஒப்பர் - சந்திரனும் பெரியோர்களும் (தாம் ஒருவர்க்கொருவர்) ஒப்பாவார்கள், திங்கள் மறு ஆற்றும் - சந்திரன் (தன்னிடத்துள்ள) களங்கத்தைச் சகித்திருப்பான்; சான்றோர் அஃது ஆற்றார் - பெரியோர்கள் அக்களங்கத்தைச் சகிக்கமாட்டார்கள். ஒரு மாசு உறின் தெருமந்து தேய்வர் - (தமக்கு) ஒரு குற்றம் (வடு) வந்தால் (மயக்கத்தால்) சுழன்று அழிவார்கள். மன் - அசை.

அழகிய இடத்தையுடைய ஆகாயத்திலிருந்து நிலாவைப் பரப்புகின்ற சந்திரனும் பெரியோர்களும் (தம்மை எல்லாரும் புகழநிற்கும் தன்மையால்) தம்மில் ஒருவகையால் ஒப்பாவர்; ஆயினும், சந்திரன் தன்னிடத்துள்ள களங்கத்தைச் சகித்துக்கொள்வான்; பெரியோர்கள் அக்களங்கத்தைச் சகிக்கமாட்டாது, தமக்கு இழிவைத்தரும் ஒரு குற்றம் வந்தால் அதற்காக வருந்தி அழிவார்கள் என்பதாம். பெரியோர்கள் தமக்குவந்த ஒருவடுவை அஞ்சிப்பரிவதால், சந்திரனிலும் மேம்பட்டவரென்பதாம்.

திங்கள் புற இருளை நீக்குவதாலும், சான்றோர் அகவிருளை நீக்குவதாலும் இருவரும் ஒப்பர் என்க. மறு - களங்கம், பங்கம். அகல் - வினைத்தொகை. (1)

இசையு மெனினும் மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர்—விசையின்
அரிமா வுளங்கிழித்த அம்பினிற் றீதோ
வரிமாப் பிழைப்பெய்த கோல்.

(ப-ரை) இசையும் எனினும் இசையாது எனினும் - (முடிக்க எண்ணிய ஒரு காரியம், தம்மால் செய்ய) முடியுமாயினும், முடியாதாயினும்,

சான்றோர் - பெரியோர்கள், வசைதீர எண்ணுவர் - (இவர் தாம் செய்யத்தகாத காரியத்தைச் செய்தார் என்னும்) பழி இல்லை யாகும்படி, எண்ணுவர் - (பெருமையான காரியங்களையே செய்ய) நினைப்பார்கள்; விசையின் நரிமா உளங்கிழித்த அம்பினில் - வேகத்தினால் நரியின் மார்பைக்கிழித்த அம்பைக்காட்டிலும், அரிமாபிழைப்ப எய்த கோல் தீதோ - சிங்கமானது உய்ந்து (பிழைத்துப்) போகும்படி எய்த அம்பு கெட்டதோ (இல்லை என்றபடி.)

(தனது) வேகத்தினால் நரி சாகும்படி அதன் மார்பைப்பிளந்த அம்பைப்பார்க்கிலும், சிங்கமானது (குறிதப்பியதனால்) பிழைத்துப்போகும்படி எய்த அம்பானது கெட்டதன்று (இழிவைத் தரத்தக்கதன்று; சிங்கத்தின் மீது எய்யப்பட்ட அம்பு என்னும் பெருமையை யுடையதாகும்.) (அதுபோல, பெருமையான ஒரு காரியத்தைத் தம்மாற் செய்துமுடிக்கக் கூடாதாயினும், அதுபற்றி இழிவைத் தருகின்ற ஒரு காரியத்தைச் செய்யத் தலைப்பட்டா ரென்பதின்றி, பெருமை தரத்தக்கதனைச் செய்ய முயல்வதே தமக்குப் பெருமையைத்தரும் என்பது கருதி) முடியுமாயினும் முடியாதாயினும் சான்றோர்கள் பழிப்பில்லாத ஒன்றினையே செய்ய நினைப்பார்கள் என்பதாம். மா - விலங்கின் பொதுப்பெயர். 'பிழைப்பெய்த' என்பதில் 'அ'கரம் தொக்கது அம்பினில் - இல் என்ற ஐந்தனுருபு எல்லைப் பொருளில் வந்தது. 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது' என்னும் திருக்குறள் இப்பொருளையே உணர்த்தும். (2)

நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங் கொண்டேறார்—உரங்கவறா
உள்ளமெனு நாரினாற் கட்டி யுளவரையாற்
செய்வர் செயற்பா லவை.

(ப-ரை) சான்றோர் - மேலோர், நரம்பு எழுந்து நல்கூர்ந்தார் ஆயினும், (உண்ண உணவில்லாமையால்) நரம்புகள் (மேலே தோன்றும்படி) எழுந்து - (அப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணமாகிய) தரித்திரத்தை அடைந்தாராலும், குரம்பு எழுந்து குற்றம் கொண்டு ஏறார்-(தாம் நடக்க வேண்டிய) வரம்பைக்கடந்து, குற்றம் தரும் செயல்களைச்செய்ய மனங்கொண்டு, (அவற்றின்கண்) மேற்செல்லார்; உரம் கவறு ஆ-(நல்ல அறிவு பற்றாக, உள்ளம் எனும் நாரினால் கட்டி - முயற்சி யென்ற கயிற்றால் (மனத்தைத் தீச்செயல்களின்கண் செல்லவிடாமல்) கட்டி, உளவரையால்-(தமக்குப் பொருள்) உள்ள அளவாக, செயல்பாலவை செய்வர்-செய்யத் தக்கனவாகிய நற்கருமங்களைச் செய்வார்.

மேன்மக்கள், (உணவின்றி உடல்மெலிந்து) நரம்புகள் மேலெழப் பெற்று வறுமை யடைந்தாராலும் தாம் ஒழுகவேண்டிய வரம்பைக் கடந்து குற்றமான செயல்களைச்செய்ய மனங்கொண்டு, (அவற்றைச் செய்

தலில்) அதிகப்படார்கள்; தமது நல்லறிவே யற்ருக முயற்சியென்னும் கயிற்ருல் கட்டி, (தமக்குப்பொருள்) உள்ள அளவிற்கு, செய்யத்தக்க தருமச்செயல்களைச் செய்வார்கள் என்பது கருத்து.

கவறு - பனையின் இருபிளவாகிய அடிமட்டை; இம்மட்டை மரத்தை இறுகப்பற்றியதுபோல், மேன்மக்களது நல்ல அறிவு மனத்தைத் தீச் செயல்களில் செல்லவிடாது பற்றிக்கொண்டிருக்கு மென்க. (3)

செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநா ளடிப்படிற்
கல்வரையு முண்டா நெறி.

(ப-ரை) நல்வரை நாட -நல்ல (உயர்ந்த) மலைகள் செறிந்த நாட்டை யுடையவனே, செல்வுழிக்கண் ஒருநாள் காணினும் - போகுமிடத்து ஒரு நாள் கண்டாலும், சான்றவர் - மேன்மக்கள், தொல்வழி கேண்மையில் தோன்ற புரிந்து யாப்பர் - பழையவழியில் வந்த சிநேகத்தைப்போல் தோன்றும்படி விரும்பிச் சிநேகிப்பார்கள்; சிலநாள் அடிப்படின் - சில காலம் (மனிதருடைய கால்) அடிபட்டால், கல்வரையும் நெறி உண்டு, ஆம் - கல்மலையும் வழி உண்டாகப்பெறும்.

உயர்ந்த மலைகள் செறிந்த நாட்டையுடையவனே, கல்மலையும் சில காலம் மனிதரது காலடிபட்டால் வழி (பாதை) உண்டாக்கப்பெறும்; ஆனல், பெரியோர்களோ என்ருல்; போகுமிடத்து ஒரு நாள் கண்டாலும், பழையவழியில் வந்த சிநேகத்தைப்போல் தோன்றும்படி விரும்பிச் சிநே கிப்பார்கள் என்பதாம்.

கல்மலையும் சிறிதுகாலம் மனிதர் காலடி படுமாயின் ஒருவழி உண்டா கப்பெறும்; அதுபோல் ஈரமில்லாத கல்லைப்போன்ற வலிய நெஞ்சத்தை யுடைய கீழ்மக்களுக்கும் பலநாள் பழக்கத்தால் சிநேக முண்டாகின்றது; அவ்வாறன்றி, சான்ருேர்கள் ஒரு நாள் போகுமிடத்துக் கண்டாலும், நெடுநாள் சிநேகம் போல் தோன்றும்படி மனம் விரும்பிச் சிநேகிப்பார்கள் என்றபடி.

"ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மை, இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே" என்று வரும் நறுந்தொகையிலும், "நல்லோர்களுக்குச் சுபாவத்தினலே காரியமில்லை; அவர்களுடைய சிநேகம் கண்டமாத்திரத்தி னலேயே ஆகிறது" எனவரும் பஞ்சதந்திர வசன (சுகிர்ல்லாப)த்தும், இக்கருத்து அடங்கியிருத்தல் காண்க.

"கேண்மையில்" என்பதில் "இல்" உருபு ஒப்புப்பொருளில் வந்தது. "கல்வரையும்" - உம், இழிவு சிறப்பின் மேல் நின்றது. "புரிந்தியாப்பர்" என்றதில் உள்ள 'இ'கரம் "யகரம் வரக்குறள் உகிரி இகரம்" ஆகிய குற் றியலிகரம். யாப்பர் - கட்டுவர்; இங்குசிநேகிப்பர் என்று கொள்ளத்தக்கது

புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா ஒருவன் உரைப்பவுங் கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாருள் நாணல் பரிந்து.

(ப-ரை) புல்லா எழுத்தின் பொருளில் வறும்கோட்டி-(இலக்கணங்களோடு) பொருந்ாத எழுத்தையுடைய பொருளில்லாத வீணர் கூட்டத்தில், கல்லா ஒருவன் உரைப்பவும் - படியாத ஒருவன் (ஒன்றைச்) சொல்லவும், நல்லார் - மேன்மக்கள், வருந்தியும் (அவன் சொல்லுவது கேட்டற்கு இனிமையில்லாமை நோக்கி) வருத்தமடைந்தும், அவன் பல்லாருள் நாணல் பரிந்து - அக்கல்லாதவன் பலர் முன்பாக அவமானமடைதலுக்காக மனமிரங்கி, கண்ணோடி - (அவனிடத்து) தாக்ஷிண்யம்வைத்து, கேட்பர் - (அவன் சொல்லும் அறிவில்லாதவைகளைப் பொறுமையுடன்) கேட்பார்கள். ஏ, மற்று - அசைகள்.

இலக்கண நூல்களோடு பொருந்தாத எழுத்தினையுடைய பொருளில்லாத வீணர் சபையில், படியாத ஒருவன் ஒன்றைச் சொல்லவும், பெரியோர்கள், (அது குற்றமுடையதாயினும்) (குற்றமுடையதென்று சொல்லிவிட்டால்) அவன் பலர்முன்பாக அவமானப்பட்டு நிற்பானே என்று மனமிரங்கி, (ஒருபுறம் அவன் சொல்லுமவற்றிற்காக) வருத்தமடைந்தபோதிலும் அவனிடத்தில் தாக்ஷிண்யம் வைத்து (அவன் சொல்லுமவற்றைப் பொறுமையுடன்) கேட்டிருப்பார்கள் என்பதாம். (பிறர் துக்கம் சகியாத மேன்மக்களாதலால், பெருந்தன்மையாகப் பொறுமையுடன் கேட்டிருப்பர் என்றபடி) பொருள் - அருத்தம், புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி, சொல்லறிவும் பொருளறிவும் இல்லாத வீணர்கூட்டம். 'வெள்ளைக்கோட்டியும் விரகினில் ஒழிமின்' என்றவிடத்து வெள்ளைக் கோட்டி என்பது அது. (5)

கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து.

(ப-ரை) கரும்பினை - கரும்பை, கடித்து-, கண்தகர நூறி-கணுக்கள் உடையும்படியாக ஒடித்து, இடித்து - சிதைத்து, நீர் கொள்ளினும் இன்சுவைத்தே ஆகும் - அதன் சாற்றைக்கொண்டாலும் (அது) இனிய சுவையையே உடையதாகும்; (அதுபோல) வடுப்படவைது இறந்தக் கண்ணும் - குற்றமாகும்படி வைது (அவ்வாறு வைதலில்) மிகுதிப்பட்ட விடத்தும், குடிப்பிறந்தார் - மேன்மக்கள், சிதைந்து-(தமது பொறுமை (கெட்டு, தம்வாயில் கூறார் - தமது வாயால்(கோபத்துடன் அழிக்குஞ் சொற்களைச்) சொல்லுமாட்டார்கள்.

கரும்பைக் கடித்தும், கணுக்கள் உடைய ஒடித்தும், சிதைத்தும் அதன் சாற்றைக்கொண்டாலும் இனிய சுவையையே உடையதாகும்; அது போல மேன்மக்கள் (தம்மை ஒருவன்) குற்றமாகும்படி மிகுதியும் வைதாலும் (தமது பொறுமை) கெட்டுத் தம்வாயால் தீய சொற்களைச் சொல்லார் என்பதாம்.

கரும்பை எவ்விதத்தால் வருத்திச்சாறுகொண்டாலும் அதன் இனிமை மாறாததுபோல், பெரியோர்கள் தம்மை ஒருவன் மிகுதியும் வைதபோதிலும் தமது இயற்கையான சாந்தகுணம் மாறுதலில்லை என்பது கருத்து.

“நாவினுற் சுட்டவடு” என்ற விடத்துப்போல ‘வடு’ என்பதை மனப்புண்என்று கொள்க. இறத்தல்-மிகுதிப்படல்; அதிகரித்தல். ‘வாயில்’ என்பதில் உருபு மயங்கி வந்தது. சுவைத்து - ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். கொள்ளினும், இறந்தக்கண்ணும் - என்பனவற்றிலுள்ள உம்மைகள் இழிவு சிறப்புப்பொருளன. சிதைந்து - என்றதால் அழிக்கும் சொற்களை என்னப்பட்டதென்க. வைது இறந்தக்கண்ணும் என்பதற்கு ‘வைது சென்றவிடத்தும்’ என்றும் பொருள் கூறும். (6)

கள்ளார்கள் உண்ணுர் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறுர் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

(ப-ரை) வடு அறு காட்சியார் - குற்றமற்ற அறிவினையுடைய மேலோர்கள், கள்ளார் - களவு செய்யார்கள், கள் உண்ணுர்-கள்ளைக்குடிக்க மாட்டார்கள்; கடிவ - விலக்கப்பட்ட காரியங்களை, கடிந்து ஒரீஇ-வெறுத்துத்தள்ளி, பிறரை எள்ளி - மற்றவர்களை இழித்து, இகழ்ந்து உரையார்-இகழ்ந்து பேசமாட்டார்கள்; தள்ளியும் - தவறியும், வாயிற்பொய் கூறுர் - வாயாற் பொய் சொல்லமாட்டார்கள்; சாயின்பரிவது இலர் - தமக்குத் தளர்ச்சிவந்த காலத்தும் வருந்தம் அடையமாட்டார்கள்.

மேலோர்கள் களவு செய்யமாட்டார்கள், கள்ளுண்ணமாட்டார்கள். விலக்கப்பட்ட காரியங்களை வெறுத்துத்தள்ளி, மற்றவர்களை இழித்து இகழ்ந்து பேசமாட்டார்கள்; தவறியும் பொய் சொல்லமாட்டார்கள்; தமக்குத் தளர்ச்சிவந்த காலத்தும் வருத்தமடையமாட்டார்கள் என்பதாம். மேன்மக்கள் தீச்செயல்களைச் செய்யார் என்பது கருத்து. கடிவ-பலவின்பால் வினையாலணையும் பெயர். தள்ளியும் - மறந்தும்; பிறரால் தூண்டப்பட்டும்; என்றுமாம். அறிவுக்குவடு - சந்தேகமும், விபரீதமும், அஞ்ஞானமும் ஆம். தள்ளியும்-என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்புப்பொருளது. (7)

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு.

(ப-ரை) திறன் அறிந்து - (ஒருவன்) நல்லொழுக்கத்தின் வகையை அறிந்து, பிறர்மறையின்கண் செவிடு ஆய் - மற்றவர்களுடைய இரகசியங்களில், செவிடனாகியும், ஏதிலார் இல்கண் குருடன் ஆய் - அயலாருடைய மனைவியரை (விருப்புடன் காண்பதில்) குருடனாகியும், தீயபுறம் கூற்றில் மூங்கையாய் - தீயசொற்களை (ஒருவரைக் காணாதவிடத்து) சொல்லுவதில் ஊமையாகியும், நிற்பான் எல் - நிற்பான் ஆனால், அவற்குயாதும் அறம் கூறவேண்டா - அவனுக்கு எவ்விதத் தருமமும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

ஒருவன் நல்லொழுக்கத்தின் வகையை அறிந்துகொண்டு மற்றவர்களுடைய இரகசியங்களைக் கேட்பதில் செவிடனும், பிறர் மனைவியரை (விருப்பத்துடன் பார்ப்பதில்) குருடனும், ஒருவரைக்காணாத விடத்து (அவனைப்பற்றிப் புறம் கூறுவதில்) ஊமையாயும் நிற்பான் ஆனால், அவனுக்கு எவ்விதத்தருமமும் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை என்பதாம். இங்குக்கூறிய மூன்று தருமங்களும் தருமங்களில் எல்லாம் சிறந்தன என்பது கருத்து. இச்செய்யுள் மேன்மக்களுடைய ஒழுக்கத்தின் சிறப்பைக் கூறிற்று என்க.

செவிடு - பண்புப்பெயர் செவிடனுக்கு ஆகுபெயர். மறை-பிறர்க்கு மறைத்துரைக்கும் சொல். இரகசிய மறை என்று வேதத்துக்கும் பெயர் என அறிக. திறன் - ஈற்றில் மகரத்துக்கு னகரம் போலி. இல் — வீடு இடவாகு பெயராகிப் பெண்ணை உணர்த்திற்று 'ஊரடங்கிற்று' என்ற இடத்தில் ஊர் என்ற இடப்பெயர் அதிலுள்ள ஜனங்களை உணர்த்தியது போல. தீய - பலவின்பால் வினையாலணையும் பெயர். கூற்று - தொழிற் பெயர்.கூறுபகுதி. 'பல்லர் மறையில் செவியிலன்' 'தீசசொற்கண் மூங்கை' என்ற எலாதியோடு இச்செய்யுளில். பிறர்மறையின் கண் செவிடாய் 'தீய புறங்கூற்றின் மூங்கையாய்' என்பவற்றோடு ஒப்பிடுக. (8)

பன்னாளும் சென்றக்கால் பண்பிலார் தம்முழை
என்னானும் வேண்டுப என்றிகழ்ப—என்னானும்
வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர்
காண் டொறும் செய்வர் சிறப்பு.

(ப-ரை) பண்பு இலார் - மேன்மைக்குணம் அற்றவர்கள், தம் உழை - தங்களிடத்து, பல்நாளும் - பல நாட்களும் சென்றக்கால் - ஒருவர்வந்தால், என் ஆனும் - ஏதாயினும் ஒரு பொருளை, வேண்டுப என்று - விரும்புவார்

கள் என்று நினைத்து, இகழ்ப - அவர்களைக் கேவலமாகப் பேசுவார்கள், விழுமியோர் - மேலோர்கள், என் ஆனும் வேண்டினும் - இவர் எதாவது நம்மிடத்தில் பெற விரும்பினாலும், நன்று என்று-நல்லதென்று நினைத்து, காண்தோறும் - காணும்போதெல்லாம், சிறப்பு செய்வர் - உபசாரம் செய்வார்கள்.

மேன்மைக்குணம் அற்றவர்கள் (அற்பர்கள்) தங்களிடத்தில் பல நாட்களும் ஒருவர் வந்தால் எதேனும் ஒருபொருளை விரும்புவார்கள் என்று எண்ணி அவர்களை இகழ்ந்து பேசுவார்கள்; மேலோர்கள் இவர் எதாவது நம்மிடத்தில் பெறவிரும்பினாலும் நல்லதென்று நினைத்து அவர்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் உபசாரம் செய்வார்கள் என்பதாம். இதனால் மேலோரின் மனமாட்சியும் கீழ்மக்களின் மனத்தாழ்ச்சியும் கூறப்பட்டன. தொறும் - உம் - முற்றுப்பொருளது ஆனும் -உம். இழிவு சிறப்பு. சென்றக் கால் சேல் - படர்க்கைக்கு வரவேண்டியது தன்மைக்கு வந்தது இடவழு அமைதி. தம்முழை - உழை - எழனுருபு. தோறு இடைச்சொல் இங்குப் பெயர்ப்பொருளைத் தந்தது. (9)

உடையார் இவரென் றொருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வர்—உடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

(ப-ரை) (சிலர்) இவர் உடையார் என்று - இவர்கள் செல்வம் உடையவர்கள் என்று நினைத்து, ஒருதலை ஆ (சப்) பற்றி - ஒரே துணிவாகக்கொண்டு,கடை ஆயார் பின் சென்று-கீழினத்தாரின்பின்னே போய்க் கொண்டு, வாழ்வர்-உயிர்வாழ்வார்கள். (அப்படி வாழ்பவர்கள்) நல்லகுலம். தலைப்பட்ட இடத்து - மேன்மையான குலத்திற் பிறந்தவர்களைச்சேர்ந்த பொழுது, உடையபிலம் தலைப்பட்டதுபோலாதே - எல்லாவற்றையும் கொண்டதான ஒரு சுரங்கத்தைச் சேர்ந்தது போலாகாதா? (ஆகும்)

சிலர், இவர்கள் செல்வமுடையவர்கள் என்று நினைத்து ஒரே துணிவுபற்றிக் கீழினத்தாரின் பின்னே போய்க்கொண்டு உயிர்வாழ் வார்கள். அப்படி வாழ்பவர்கள் மேன்மையான குலத்திற் பிறந்தவர்களைச் சேர்ந்தபொழுது விரும்பப்பட்ட எல்லாப்பொருள்களுமுடைய ஒரு சுரங்கத்தைச்சேர்ந்தது போலாகும் என்பதாம். இது மேன்மக்களின் சேர்க்கையின் பயனைக் கூறியதென்க. கடையாயர் – அதர்மர்கள். தலைப்படல் ஒரு சொல். தமிழுபசர்க்கம். இந்த இடத்தில் தலை என்பதற்குப் பொருளில்லை. ஆனால் வேறு பொருள் தருமிடத்தில் அது உபசர்க்கம் அன்று. குலம் - அதிற்பிறந்தாரை உணர்த்திற்று. இடவாகு பெயர். போலாது - இடைச்சொல்லடியாய்ப் பிறந்த எதிர்மறை வினைமுற்று. போலாதே - ஏ எதிர்மறை. (10)

## நான்காம் அதிகாரம் - பெரியாரைப் பிழையாமை.

பெரியாரைப் பிழையாமை - பெரியோர்களை இகழ்ந்து நடவாமை. பெரியார் என்றது தன்னினும் அறிவு, ஒழுக்கம், வலிமை முதலியவற்றால் மேம்பட்டாரை என்க. சென்ற அதிகாரத்தால் மேன்மக்களின் தன்மையைக் கூறியவர் அத்தகையோர்க்குப் பிழை செய்யின் ஒருவன் நிச்சயமாய்க் கெடுவான் என்று பெரியோரைப் பிழைத்தலினால் வரும் தீங்கை எடுத்துரைத்து, அவன் அவருக்குப் பிழைசெய்யாது வாழவேண்டுமென்று வற்புறுத்துவதன் பொருட்டு, இவ்வதிகாரத்தை மேன்மக்களென்னும் அதிகாரத்தின் பின் வைத்தார்.

பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கு மருவி அணிமலை நன்னாட!
பேர்க்குதல் யார்க்கும் அரிது.

(ப-ரை) ஆர்க்கும் அருவி அணிமலை நல்நாட - ஒலிக்கின்ற நீரருவிகள் வீழ்கின்ற அழகிய மலைகள் அமைந்த நல்ல நாட்டையுடையவனே, பொறுப்பர் என்று எண்ணி - பொறுத்துக் கொள்ளுவர் என்று நினைத்து, புரைதீர்ந்தார் மாட்டும் - குற்றமொன்றும் இல்லாத பெரியோர்களிடத்தும்; வெறுப்பன செய்யாமைவேண்டும் - வெறுக்கத் தக்கவைகளைச் செய்யாதிருத்தல் வேண்டும்; வெறுத்தபின் பேர்க்குதல் யார்க்கும் அரிது - (அவர்கள்) கோபித்தபின் (அவர்களது கோபத்தை) நீக்குதல் எத்தகையோர்க்கும் அரியதாம்.

ஒலிக்கின்ற நீரருவிகள் வீழ்கின்ற அழகிய மலைகள் அமைந்த நல்ல நாட்டையுடையவனே, சகித்துக் கொள்ளுவார்கள் என்று நினைத்து, (காமம் குரோதம் முதலிய) குற்ற மற்ற பெரியோர்களிடத்து, அவர்கள் வெறுக்கு மவற்றைச் செய்யா திருத்தல் வேண்டும்; ஏனென்றால், அவர்கள் கோபித்தாரானால், அவர்களுடைய கோபத்தை மாற்றுதல் யார்க்கும் அரிது என்பதாம். சிறியோர் பெரும்பிழை செய்தனர் ஆயின் பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே என்ற நறுந்தொகைப் பாட்டை நோக்குக. புரைதீர்ந்தார் மாட்டும் மாடு - ஏழாம் வேற்றுமை உருபு. உம் உயர்வு சிறப்பு. அருவி, மலை முதலியன உள்ளமையின் நல்நாடு என்னப்பட்டது.

பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்—அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயனில் லறிவி னவர்.

(ப-ரை) நல்ல நயன் இல் அறிவின் அவர் - நல்ல சிறப்பில்லாத அறிவினையுடையவர், பொன்னே கொடுத்தும் புணர்தற்கு அரியாரை - பொன்னையே கொடுத்தாலும் சார்தற்கு அரியவர்களான பெரியோர்களை, கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்-யாதொரு பயனும் உதவாமல் சாரப்பெற்றிருந்தும், பயன் இல் பொழுதாக்கழிப்பரே - பிரயோஜனமற்ற வீண்பொழுதாகக் (காலத்தைக்) கழிப்பார்களே! மன் ஓ - கழிவிரக்கத்தின்கண் வந்த இடைச்சொற்கள்.

கூரிய அறிவில்லாதவர், மிகுந்த பொன்னைக் கொடுத்தாலும் சார்தற்கு அரிய பெரியோர்களைத் தாம் அவர்களுக்கு யாதொரு பிரயோஜனமும் செய்யாமல், அடையப்பெற்றிருந்தும் அவர்களால் தாம் அடைய வேண்டிய நன்மைகளை அடையாமல் வீண்பொழுதாகக் காலத்தைக்கழிப்பார்களே என்று இரங்கிக்கூறியபடி. பொன்னே - ஏ உயர்வு சிறப்பு. அன்னோ - (ஐயோ) இரக்கப்பொருள் தந்த இடைச்சொல். (2)

அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்.

(ப-ரை) அவமதிப்பும் ஆன்றமதிப்பும் இரண்டும் - (பெரியாரது) இழிவும் சிறந்த பெருமையுமாகிய இரண்டும், மிகைமக்களால் மதிக்கற்பால - மேன்மக்களால் மதிக்கத்தக்கவை; நயம் உணராக் கை அறியா மாக்கள் - மேன்மையை அறியாத, நல்லொழுக்கத்தை அறியாத கீழ்மக்களுடைய இகழ்ச்சியும், உயர்த்துக்கூறும் புகழ்ச்சியும், வடித்த நூலார் வையார் - மிகவும் சிறந்த நூல்களைக் கற்றறிந்தவர்கள் (அவைகள் சரியானவையென்று) கொள்ளார்கள்.

(பெரியாரது) இழிந்த தன்மையும் பெருமையுமாகிய இரண்டும் மேன்மக்களால் மதிக்கத்தக்கவை; அஃதன்றி, மேன்மையையும் நல்லொழுக்கத்தையுமறியாக் கீழ்மக்களது இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் மிகவும் சிறந்த நூல்களைக்கற்ற அறிவாளர்கள் (சரியானவையென்று) கொள்ளார்கள் என்பதாம். கீழ்மக்கள் மதிக்க அறியாது மதித்து இகழ்ந்த பெரியோரை அவர்கள் உண்மையில் இழிந்தவரே என்று அவர்களுக்குப் பிழைசெய்தால் தமக்குக் கேடு சம்பவிக்குமானதால், அவ்வாறு செய்யாமல், மேன்மக்கள் மதிப்பிட்டுச் சொன்னதையே கொள்ளவேண்டும் என்பதாம். மதிப்பு, மிகை-தொழிற்பெயர்கள் எத்து-முதனிலைத் தொழிற்பெயர் கையறியா மாக்கள் என்றதால் அவர்கள் விலங்கின் தன்மையர் என்பதை உணர்த்தியபடி என்க. உணராமாக்கள், அறியாமாக்கள் என இயையும். (3)

விரிசிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்று முட்கும்;
அருமை யுடைய அரண்சேர்ந்து முய்யார்:
பெருமை யுடையார் செறின்.

184384

(ப-ரை) விரிசிற நாகம் விடர் உளதேனும் - மிகுந்த நிறத்தையுடைய பாம்பானது மலைப்பிளவில் இருப்பதானாலும், உருமின் கடும் சினம்சேண் நின்றும் உட்கும் - இடியினது கொடிய கோபம் வெகுதூரத்தி லிருந்தாலும் (அதற்குப்) பயப்படும்; பெருமை உடையார் செறின்-பெரியோர்கள் கோபித்தால், அருமை உடைய அரண் சேர்ந்தும் - (அவர்கள் கோபிக்கும்படி அவர்களுக்குப் பிழை செய்த சிறியவர்கள்; பகைவர்கள் கொள்ளற்கு) அருமையையுடைய கோட்டையைச் சேர்ந்தாலும், உய்யார் - பிழைக்கமாட்டார்கள்.

இடியானது வெகுதூரத்திலிருந்தாலும், அதனுடைய வேகத்திற்குப் பாம்பானது மலைப்பிளவில் இருந்தும் பயப்படும்; அதுபோல (பகைவர் முற்றுகை செய்து பிடித்தற்கு) அரிய கோட்டையை அடைந்திருந்தாலும், பெரியோர்கள் கோபித்தாராயின், (சிறியோர்கள்) பிழைக்கமாட்டார்கள் என்பதாம். (ஆதலால் பெரியோரது வலிமையை யறிந்து அறிவுடையார் அவர்களுக்குப் பிழைசெய்யார்கள் என்றபடி.) உரும்-இடி. 'இறந்தமைந்த சார்புடையார் ஆயினும், உய்யார். சிறந்தமைந்த சீரார் செறின், என்ற திருக்குறளை இதன் கருத்தோடு ஒப்பிடுக. நிற்ப - நின்று என்று, பொருள்தருவதால் எச்சத்திரிபு. நாகம் இடியோசைக் கஞ்சும், நகம்-மலை. நகத்தில் வசிப்பது நாகம். இது வடமொழி தத்திதாந்த நாமம். (4)

எம்மை யறிந்திலி ரெம்போல்வா ரில்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று—தம்மை
அரியரா நோக்கி யறனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

(ப-ரை) எம்மை அறிந்திலிர் - எம்மை (நீர்) அறியவில்லை, எம்போல்வார் இல் என்று - எம்மைப்போன்ற வல்லவர்கள் (எங்கும்) இல்லையென்று, தம்மைத் தாம் கொள்வது கோள் அன்று - தங்களைத் தாங்களே (புகழ்ந்து) கொள்வது (உயர்ந்தோருடைய) கொள்கை அன்று; தம்மை - தங்களை, அரியரா நோக்கி - அரியவர்களாக நினைத்து, அறன் அறியும் சான்றோர் - தருமத்தை அறிந்த பெரியோர்கள், பெரியராக் கொள்வது கோள் - பெரியோர்களாக மதிக்கும் மதிப்பே கொள்ளத் தக்கது.

அறிவுடையார் தங்களைத் தாங்களே பெரியவர்களென்று மதித்து, உண்மைப் பெரியோர்கள் முன்னிலையில் கர்வத்துடன் நடந்து அபசாரப் படமாட்டார்கள் என்று குறிப்பா லுணர்த்தியபடி.

எம்மை நீர் அறிந்தவரில்லை; எம்மைப்போன்ற சிறந்தவர்கள் (இவ்வுலகத்தில்) இல்லையென்று தங்களைத் தாங்களே (புகழ்ந்து கூறிக்) கொள்வது (உயர்ந்தோருடைய) கொள்கையன்று; (பின்னர் எது கொள்ளத்தக்கதென்றால்) தருமத்தை அறிந்த பெரியோர்கள்; தங்களை அரியவர்களாக நினைத்துப் பெரியவர்களாக மதிப்பது கொள்ளத்தக்கது. கோள் - முதல் நீண்ட தொழிற் பெயர். கொள் - பகுதி. எம் என்று பன்மையிற் கூறியது செருக்குப் பற்றி என்க.

நளிகடல் தண்சேர்ப்ப! நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

(ப-ரை) நளிகடல் - பெரியகடலின், தண் சேர்ப்ப - குளிர்ந்த துறையையுடையவனே; சிறியர் கேண்மை - அற்பருடைய சிநேகம், நாள் நிழல் போல - உதயகாலத்துச் சாயைபோல, விளியும் - வர வரக் குறையும், தொல் புகழ் ஆளர் - பழமையாகிய கீர்த்தியையுடைய பெரியோர்களது சிநேகம், விளிவு இன்றி - (அங்ஙனம்) குறைதல் இல்லாமல், அல்கு நிழல் போல - மாலைக்காலத்துச் சாயைபோல, அகன்று அகன்று ஓடும் - மிகவும் அதிகரித்து நீளும்

குளிர்ந்த பெரிய கடல் துறையையுடைய அரசனே! அற்பருடைய நட்பானது உதயகாலத்துச் சாயைபோல வரவரக் குறையும்; அங்ஙனம் குறைதல்இல்லாமல் மாலைகாலத்துச் சாயைபோல பழமையாகிய (தொன்று தொட்டுவந்த) கீர்த்தியையுடைய பெரியோர்களின் சிநேகம் மிகவும் அதிகரித்து நீளும் என்பதாம். இச்செய்யுள் பெரியோர் நட்பின் சிறப்பையும், சிறியோர் நட்பின் இழிவையும் கூறிற்று; பிற்பகற் பொழுது கழியும்போதெல்லாம் நிழல் மிகுந்து வருதல்போலப்பெரியோர் நட்பானது அவர்முடியுமட்டும் அதிகரித்துவரும். அற்பருடைய நட்பு முதலில் அதிகமாய்க் காணப்படினும் குறையும். ஆகவே சிறியார் நட்பு தள்ளத்தக்கது என்பதாம். ‘நிறைநீர நீரவர்கேண்மை பிறைமதிப் பின்னீரப்பேதையார் நட்பு’ என்ற திருக்குறளோடும்; பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்,வரிசை வரிசையா நந்தும் - வரிசையால், வான் உரர் மதியம்போல் வைகலும் தேயுமே, தானே சிறியார் தொடர்பு.’ என்ற நாலடியாரோடும் இச்செய்யுளை ஒப்பிடுக.

நளி - உரிச்சொல். தண் சேர்ப்ப = தண்மை + சேர்ப்ப. சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன். நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும் என்க.

அகன்று அகன்று - தொடர்க்குத்தொடர், அகன்று. அகல் பகுதி. கேண்மை - பண்புச்சொல். இச்செய்யுள் முற்றுவமை அணியைக்கொண்டது. அதாவது உபமானம், உபமேயம், உவம உருபு, பொதுத்தன்மை என்னும் நான்கும் அமையப் பெற்றதாம். (6)

மன்னர் திருவும் மகளிர் எழினலமும்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்
உழைதங்கட் சென்றார்க் கொருங்கு.

(ப-ரை) மன்னர் திருவும் - அரசர்களின் செல்வத்தையும், மகளிர் எழில் நலமும்-பெண்களின் வளர்ச்சியோடு கூடிய அழகையும், துன்னியார்- அடைந்தவர்கள்; துய்ப்பர் - அனுபவிப்பார்கள். தகல்வேண்டா - இன்னார் தக்கவர் என்பதில்லை, குழைகொண்டுதாழ்ந்த- தளிர்களைக்கொண்டு தாழ்ந் திருக்கிற, குளிர்மரம் - குளிர்ந்த மரங்கள், தம்கண் - தங்களிடத்தில், துன்னிச் சென்றார்க்கு எல்லாம் - சமீபித்து வந்தவர்களுக் கெல்லாம், ஒருங்கு உழை - ஒருமாதிரியான இடமாம்,

மிகுந்த தளிர்களைக்கொண்டு தாழ்ந்திருக்கிற குளிர்ந்த மரங்கள் தம்மிடம் வந்து சேர்ந்த யாவர்க்கும் இடமாம். அதுபோல, அரசர்களின் செல்வத்தையும் பெண்களின் அழகையும் இன்னார் தக்கவர் என்பதில்லாமல் அவர்களை அடைந்த யாவரும் அனுபவிப்பார்கள் என்பதாம். யாவரும், இது யாவர்க்கும் பயனைச்செய்கின்ற அரசருடைய தன்மையைக்கூறிற்று. அப்படிப்பட்டவருக்கு அபசாரம் செய்யக்கூடாதென்க. இங்கு'மகளிர்'என்றது பொது மகளிரை எனக் கொள்க.

தம்மிடமடைந்த உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற மாறுபாடு இன்றி யாவரையும் ஒருங்கே பாவிக்கும் மரங்களையும் விலை மகளிரையும்போன்று அரசர் பெரியாரையும் சிறியாரையும் ஒருபடியாய் எண்ணில், அத்தன்மை அரசர் பெரியாரைப் பிழைத்தமை ஆம். என்ற கருத்துத் தோன்றக் கூறுவாருமுண்டு. முதல்பொருளில் அரசருக்குப் பிறர் பிழைபுரியக் கூடாதென்றும், இரண்டாவதில், அரசர், பெரியோருக்குப் பிழைசெய்யக் கூடாதென்றும் கூறப்பட்டமை உணர்க. மன் - பெருமை; அதனையுடையவர் அரசர். சென்றார் - இறந்தகால வினையாலணையும் பெயர், தங்கண்-கண்- ஏழனுருபு. திருவும் - நலமும்-, எண்ணும் மைகள்.

தெரியத் தெரியும் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய
உலவா விருங்கழிச் சேர்ப்பயார் மாட்டும்
கலவாமை கோடி யுறும்.

(ப-ரை) பெரிய - விசாலமாகிய, உலவா - நீர் வற்ருத, இரும்கழி - மிகுந்த கழியையுடைய, சேர்ப்ப - கடல்துறையை யுடையவனே!, தெரிய தெரியும் - தெளியும்படி ஆராயும் ஆராய்ச்சியானது, இலார்கண்ணும் - இல்லாதவரிடத்திலும், பிரிய- (ஒருவன் கூடியிருந்து) பிரிய, பெரு படர் செய்வும் - மிகவும் நினைத்தற்கு ஏதுவான வருத்தத்தை உண்டாக்கும்; (ஆதலால்) யார்மாட்டும் - எவரிடத்தும் சிநேகம் செய்யாமலிருத்தல், கோடி உறும் - கோடிமடங்கு நல்லது.

விஷயங்களில் தெளிவுண்டாகும்படி ஆராயும் ஆராய்ச்சி இல்லாதவரிடத்திலும், ஒருவன் கூடியிருந்து பிரிந்தால் அது மிகவும் நினைத்தற்குக் காரணமான வருத்தத்தை உண்டாக்கும். ஆதலால் எவரிடத்திலும் சிநேகிக்காமல் இருத்தல் மிகச் சிறந்த தென்பதாம். அறிவில்லாதவரைச் சிநேகித்துப் பிரியின், அது பெருந்துக்கத்தைக்கொடுக்குமென்றதால், அறிவுடையாரைக் கூடிப்பிரியின் அதனால் உண்டாகும் துக்கம்சொல்லவேண்டியதில்லை. இக்கருத்துடனேயே கூடிப்பிரியேல் என்ருர் ஔவையார். இல்லார் கண்ணும் கண் ஏழனுருபு. 'உம்'மை இழிவு சிறப்பு. யார் மாட்டும் மாடு, ஏழனுருபு உம் - முற்றும்மை. கோடி என்றது நூறுலட்சம். இங்கு மிகப் பெரிய எண்ணுக்கு ஆயிற்றென்க. பெரிய - குறிப்புப் பெயரெச்சம். உலவா(த) ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், படர் - பிரிதலால் உண்டாகியதுன்பத்தை எப்போதும்சிந்தித்தல். ஈதொரு உரிச்சொல்.

கல்லாது போகிய நாளும்; பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும்,—ஒல்வ
கொடாஅது ஒழிந்த பகலும், உரைப்பில்,
படாஅவாம் பண்புடையார் கண்.

(ப-ரை) கல்லாது போகிய நாளும் - (நல்ல நூல்களைப்) படியாமல் (வீணுகக்) கழிந்த நாளும், பெரியவர்கள் செல்லாது - பெரியவர்களிடம் (தர்ம நூல்களை அறியப்) போகாமல், கழிந்த தினமும் - (வீணுகக்) கழிந்த நாளும், ஒல்வ(தம்மால் கொடுக்க) முடிந்த பொருளை; கொடா அது-(இரப்போர்க்குக்) கொடாமல்; கழிந்த பகலும்—, உரைப்பின் - சொல்லுமிடத்து, பண்புடையார்கண் நற்குணமுடையவர்களிடத்து, படாஅம் - உண்டாகாவாம்.

படித்தற்குரிய நூல்களைப் படியாமல் வீணுகப்போன தினமும் பெரியோரிடம் அறநூல்களை அறியப்போகாமல் வீணுகக் கழிந்த நாளும், தம்மால் கொடுக்க முடிந்த பொருளைக் கொடாமல் கழிந்த நாளும் நற்குணமுடையவர்களிடத்து உண்டாகாவாம் என்பதாம். அதாவது ஒவ்வொரு நாளும் கல்லாமையும், பெரியோர்களிடத்துப் போகாமையும், ஈயாமையும் துர்க்குணங்கள் என்பதாம். நாள், வைகல், பகல் என ஒரே அர்த்தத்தைத்

தரும் பல சொற்கள் அடுக்கிவந்தது பொருட் பின்வருநிலை அணி. 'கல்லாது போகிய நாள், பெரியவர்கண் செல்லாது போகிய வைகல், ஒல்வ கொடாது ஒழிந்த பகல்" இந்த மூன்றுக்கும் பொருந்தும்படி 'பண்புடையார் கண்படாவாம்" என்ற முற்றை வைத்தது கடைநிலைத் தொழில் தீவகஅணி என்க. கல்லாது - எதிர்மறை வினையெச்சம். பெரியவர்கண், பண்புடையார்கண் - கண் இரண்டிடத்தும் ஏழாம் வேற்றுமை உருபுகள். ஒல்வ - வினையாலணையும் பெயர். கோடாஅது, படாஅவாம், இன்னிசை அளபெடைகள், நாளும், வைகலும், பகலும் - உம்மை எண்ணும்மை. (9)

பெரியார் பெருமை சிறுதகைமை ஒன்றிற்(கு)
உரியார் உரிமை அடக்கம்—தெரியுங்கால்
செல்வம் உடையாரும் செல்வரே தற்சேர்ந்தார்
அல்லல் களைப எனின்.

(ப-ரை) தெரியுங்கால் - ஆராயுமிடத்து, பெரியார் பெருமை - மேலோரது பெருமைக் குணமாவது, சிறு தகைமை - (செருக்கடையாமல்) தாழ்ந்திருத்தலாம், ஒன்றிற்கு உரியார் உரிமை - (கல்விமுதலிய சிறந்த) ஒரு பொருளை உடையவருடைய குணமாவது, அடக்கம் - அடங்கி நடத்தலாம், செல்வம் உடையாரும் - செல்வத்தை உடையவர்களும், தன் சேர்ந்தார் அல்லல்களைபஎனின் - தம்மைச சேர்ந்தவர்களுடைய (தரித்திரம்) முதலிய கஷ்டங்களை நீக்குவார்களானால், செல்வரே - செல்வம் உடையவர்கள் ஆவார்கள்.

ஆராய்ந்து சொல்லுமிடத்து மேலோருடைய பெருந்தன்மையாவது செருக்குக்கொள்ளாமல் இருத்தலாம்; கல்வி முதலிய சிறந்த ஒருபொருளை உடையவருடைய குணமாவது, அடங்கி நடத்தலாம். செல்வத்தையுடையயவர்களும் தம்மைச் சேர்ந்தவர்களுடைய (தரித்திர முதலிய) கஷ்டங்களை நீக்குவார்கள்; ஆனால், அப்படிப்பட்டவர்களே செல்வமுடையவர் ஆவார் என்பதாம். அதாவது பெரியோர்கள், வணக்கம், அடக்கம், பிறர்க்குதவி செய்யுங்குணம் இவற்றைக் கொண்டிருப்பார்கள் என்பதாம்.

இச்செய்யுளின் கருத்தை 'கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு செல்வமும் செல்வம் எனப்படும். இல்லார் குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும், தலைவணங்கித் தாழப்பெறின்' என்ற நீதிநெறி விளக்கச் செய்யுளோடு ஒப்பிடுக. தம் என்ற பன்மை வரவேண்டிய இடத்தில் தன் என்ற ஒருமை வந்திருப்பது ஒருமை, பன்மை மயக்கம் என்னப்படும். உடையார், சேர்ந்தார் - வினையாலணையும் பெயர்கள். (10)

---

## ஐந்தாம் அதிகாரம்—நல்லினம் சேர்தல்.

நல்லினம் சேர்தல் - தாம் நற்குணச் செய்கைகளைக் கைக்கொண்டு ஒழுகுதல் அன்றி, அத்தகைய சன்மார்க்கங்களை உள்ளது உள்ளபடி அறிந்து அவற்றிற் செலுத்தும் பெரியோர்களுடைய நட்பை அடைதல் என்பதாம். பெரியோரைப் பிழையாமை அன்றி அவரது நட்பையும் விடாது கொள்ளவேண்டு மாதலால், இது 'பெரியோரைப்பிழையாமை'யின் பின்னர் வைக்கப்பெற்ற தென்க.

அறியாப் பருவத்(து) அடங்காரோ(டு) ஒன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வும்—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயில் முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

(ப-ரை) அறியாப்பருவத்து - அறியாமையையுடைய இளம் பிராயத்தில், அடங்காரோடு ஒன்றி - அடக்கமற்ற அற்பர்களோடு சிநேகித்து, நெறி அல்ல - நல்லமார்க்க மல்லாதவைகளை, செய்து ஒழுகியவும்-செய்து நடந்த குற்றங்களும், நெறி அறிந்த - சன்மார்க்கத்தை அறிந்த, நல்சார்வு சார - நல்லவர்களைச் சிநேகித்தலால், புல்பனி - புல் நுனியில் சேர்ந்திருக்கும் பனித்துளி, வெயில் முறுக - வெயில் மிகுதலால், பற்றுவிட்டு ஆங்கு- அதை(புல்லை)ச் சேர்ந்திருத்தல் நீங்கினால் போல, கெடும்—.

அறியாமையையுடைய இளம்பிராயத்தில், அடக்கமற்ற அற்பரோடு சிநேகித்துச் சன்மார்க்க மில்லாதவற்றைச் செய்து நடந்த குற்றங்களும் சன்மார்க்கத்தை அறிந்த நல்லவர்களைச் சிநேகித்தலால், புல்லின் நுனியில் ஒட்டிக்கொண்டிருக்கிற பனித்துளிபோலப்பற்று அற்றநீங்கும் என்பதாம். உவமைஅணி. அறியா(த) - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பருவத்து - அத்து சாரியை. அடங்கார், அல்ல, ஒழுகிய - வினையாலணையும் பெயர்கள். ஒன்றி - ஒன்று - பகுதி. ஒழுகியவ்வும். வ் விரித்தல் விகாரம். சார்வு - தொழிலாகு பெயர். கெடுமே - ஏ தேற்றம். விட்டாங்கு- விட்டால்போல. ஆங்கு - உவமஉருபு. கேடும் என்றதால் திரும்பத் தோன்றாது என்னப்பட்ட தென்க. (1)

அறிமின் அறநெறி; அஞ்சிமின் கூற்றம்;
பொறுமின் பிறர் கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை; எஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

(ப-ரை) எஞ்ஞான்றும் - எக்காலத்தும், அறம் நெறி–, அறிமின் - தெரிந்து கொள்ளுங்கள். கூற்றம் அஞ்சுமின் - யமனுக்குப் பயப்படுங்கள்; பிறர்கடும் - பிறர் கூறும் கொடுஞ்சொற்களை; பொறுமின் - பொறுத்துக் கொள்ளுங்கள்; வஞ்சம் - வஞ்சனையை; போற்றுமின் - (உங்களிடம் சேராமல் உங்களைக்) காப்பாற்றிக் கொள்ளுங்கள், வினைதீயார் - தங்களுடைய காரியங்களால் கெட்டவர்களுடைய, கேண்மை வெறுமின் - சிநேகத்தை வெறுத்து விடுங்கள்; பெரியார் வாய்ச்சொல் - (கல்வி கேள்வி முதலியவற்றால்) பெரியவர்களுடைய சொல்லை, பெறுமின் - கொள்ளுங்கள்.

எக்காலத்தும் தரும மார்க்கத்தை அறியுங்கள்; யமனுக்குப் பயப்படுங்கள், (தான தருமங்களைச் செய்மின் என்றபடி) பிறர் கூறும் கடுஞ் சொற்களைப்பொறுத்துக் கொள்ளுங்கள்; வஞ்சனையை உங்களிடம் அணுகாமல் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; துஷ்ட சவகாசத்தை வெறுத்து விடுங்கள் பெரியோர் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடந்திடுங்கள் என்பதாம். யமனுக்குப்பயப்படுங்கள் என்றதால் யமன் வருங்காலம் இன்னதெனத் தெரியாதால் பின்னே செய்வோம் என்றிராமல் இப்போதே தானதருமங்களைச் செய்யுங்கள். என்பது குறிப்பாய் உணர்த்தப்பட்டதென்க. அன்றியும் யமதண்டனைக்குப்பயந்து புண்ணியம் செய்யுங்கள் என்று கூறியபடிஎனினும் ஒக்கும். அறிமின், அஞ்சுமின், பொறுமின், போற்றுமின், வெறுமின், பெறுமின், ஏவற்பன்மை வினைமுற்றுக்கள். கூற்றுவன் உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவன் (பிரிப்பவன்.) ‘போற்றுமின் வஞ்சம்’ என்றதற்கு “புறஞ்சொற் போற்றுமின்” என்ற சிலப்பதிகார வாக்கியத்திற்குப் பொருள் கொள்வதுபோல் கூறப்பட்டது. பெரியார் வாய்ச்சொல் - பெரியோர் செய்யும் ஆசீர்வாதமுமாம். (2)

அடைந்தார்ப் பிரிவும் அரும்பிணியும் கேடும்
உடங்குடம்பு கொண்டார்க் குறலால்—தொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
உறப்புணர்க அம்மாஎன் னெஞ்சு.

(ப-ரை) தொடங்கி - (நூலாராய்ச்சியை) ஆரம்பித்து, ‘அடைந்தார் பிரிவும் - தம்மைச்சேர்ந்தவரைப் பிரிதலும், அரும்பிணியும் - தீர்க்க அருமையான வியாதிகளும், கேடும் - நீங்குகளும், உடம்பு கொண்டார்க்கு - இம்மானிட உடம்பு எடுத்தவர்களுக்கு, உடங்கு - ஒன்றுசேர, உறவால் - உண்டாவதால், பிறப்பு இன்னாது - (மானிட) ஜனமம் துன்பம் தருவதாம், என்று உணரும் - என்று அறிந்துகொள்ளுகிற, பேர் அறிவனாரை - சிறந்த புத்திமான்களை, என்னெஞ்சு - எனது மனம், உறப்புணர்க - என் மனம் உறுதியாகச் சேரட்டும். அம்மா - அசை.

நூல்களை ஆராய்ச்சி செய்தலை ஆரம்பித்து, ‘தம்மைச்சேர்ந்த பந்துக்கள் சிநேகர் முதலியோரைவிட்டு நீங்குதலும், தீர்த்தற்கு அரிய நோய்களும்

தீங்குகளும் இவ்வுடலையுடைய மானிடர்க்கு உண்டாவதால் இந்த ஜன்மம் துன்பத்தையே தருவது' என்று துணிகின்ற புத்திமான்களை என் மனம் உறுதியாகச் சேரட்டும் என்பதாம். கேடு - முதல் நீண்ட தொழிற்பெயர். உடங்கு - ஒருங்கு என்பது போன்ற ஓர் இடைச்சொல். - கொண்டார் வினையாலணையும் பெயர். உறவால் என்றது, இன்னாது என்பதைக் கொண்டு முடிந்தது.

இறப்ப நினையுங்கால் இன்னா(து) எனினும்
பிறப்பினை யாரும் முனியார்—பிறப்பினுள்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ(டு) எஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.

(ப-ரை) பிறப்பினுள் - தான்தோன்றிய மனிதப் பிறப்பிலே, பண்பு ஆற்றும் நெஞ்சத்து அவர்களோடு நண்பு ஆற்றி - நல்லியல்பு உள்ளன வற்றைச் செய்யவேண்டுமென்கிற மனமுடைய நல்லவர்களோடு சிநேகம் செய்து, எஞ்ஞான்றும் - எக்காலத்தும், நட்கப்பெறின் - அவர்களோடுகூடி வாழப்பெற்றால், இறப்பநினையுங்கால் - மிகவும் எண்ணுமிடத்து, இன்னாது எனினும் - பிறப்பு துன்பம் கொடுப்பதானாலும், பிறப்பினையாரும் முனியார் - (அவனது) மனித ஜன்மத்தை எவரும் வெறுக்கமாட்டார்கள்.

தான்தோன்றிய மனிதப் பிறப்பிலே, நல்லியல்பு உள்ளனவற்றைச் செய்யவேண்டுமென்கிற மனதையுடைய நல்லவர்களோடு சிநேகித்து, எப்போதும் அவர்களோடு கூடிவாழப்பெற்றால், மிகவும் ஆலோசிக்கும்போது, பிறப்பானது துன்பம் தருவதானாலும், அவருடைய மனித ஜன்மத்தை வெறுக்கமாட்டார்கள் என்பதாம். பிறப்பு - தொழிற் பெயா. நட்க - வினையெச்சம். நள் - பகுதி. (4)

ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும்பிறி தாகித் தீர்த்தம்ஆம்.—ஓரும்
குலமாட்சி இல்லாரும் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

(ப-ரை) ஊர் அங்கணம் நீர் - ஊரின் ஜலதாரைத் தண்ணீரானது, உரவு நீர் சேர்ந்தக்கால் - சிறப்புவாய்ந்ததொரு(நதி, குளம் முதலியவற்றின்) நீரைக் கலந்தால், பேரும்பிறிது ஆகி - (அதற்குள்ள ஜலநீர் என்ற) பெயரும் மாறி, தீர்த்தம் ஆம் - அது புண்ணிய தீர்த்தம் ஆகிவிடும். (அப்படியே) ஓரும் - (யாவரும்) அறிகின்ற, குலம் மாட்சி இல்லாரும் - தாம் தோன்றிய குலத்தின் பெருமை அற்றவர்களும், நல்ல மாட்சி - நற்குணமும் பெருமையும் உடைய நல்லாரைச்சார்ந்து - உயர்குடிப்பிறந்த நல்லவர்களை அடுத்து, குன்றுபோல் நிற்பர் - மலைபோலச் சிறப்புற்று நிற்பர்.

ஊரிலுள்ள ஜலதாரை நீரானது, சிறப்புவாய்ந்த ஒரு நதி குளம் முதலியவற்றின் நீரைக்கலந்தால், அதற்கு வாய்ந்திருந்த ஜலதாரை நீர் என்றபெயர் வேருகிப் புண்ணிய தீர்த்தமாகிவிடும்; அதுபோலவே, தான் பிறந்த குலத்தின் பெருமை அற்றவர்களும், நற்குணத்தையும் பெருமையையுமுடைய, உயர் குடிப்பிறந்த மேன்மக்களையடுத்து மலையைப்போல் சிறப்புற்று நிற்பர் என்பதாம். நல்லோரைச் சேர்தலால், பிறரும் மேன்மை அடைவார்கள் என்பதுணர்த்தப்பட்டது என்க. அங்கணம், தீர்த்தம். வடமொழிச்சொற்கள். ஒரும் - அசைநிலை என்றும் ஆம். மாட்சி - மாண் - பகுதி, சி-பண்புப்பெயர் விகுதி.

மலையின் சிறப்பு 'அளக்கல் ஆகா அளவும் பொருளும் துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே என்பதாம். (நன்னூல் பொதுப்பாயிரம்) அதாவது, அளக்கமுடியாத வடிவத்தின் அளவும், பலவகைப்பொருளைக் கொண்டிருத்தலும், அசைக்கமுடியாத உருவத்தின் நிலைமையும், எவராலும் காணப்படுகின்ற உயர்ச்சியும் மழையின்றிக் காய்ந்துபோனபோதும் தன்னைச்சார்ந்தருக்கு நீர் வளத்தைக் கொடுக்கிற கொடையும் என்க. (5)

ஒண்கதிர் வாண்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூஉம்:
குன்றிய சீர்மையர் ஆயினும் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

(ப-ரை) ஓங்கிய - உயர்ந்த, அம்கண்-அழகிய இடத்தைக்கொண்ட, விசும்பின் ஒள்கதிர் - ஆகாயத்தில் பிரகாசமாகிய கதிர்களையுடைய சந்திரனை, சேர்தலால் - அடைந்திருத்தலினால், முயலும்—, தொழப்படூஉம்- தொழப்படும் (அதுபோல) குன்றிய சீர்மையர் ஆயினும்-குறைந்த சிறப்புடையவர்கள் ஆனாலும், குன்று அன்னார்கேண்மை - மலைபோன்ற பெருமை உடையவர்களுடைய சிநேகத்தை, கொளின் - அடைந்தால், சீர் பெறுவர் - சிறப்படைவார்கள்.

உயர்ந்த, இடமகன்ற ஆகாயத்திலுள்ள பிரகாசமாகிய கிரணங்களையுடைய சந்திரனை அடைந்திருத்தலினால் அதிலுள்ள முயலை யாவரும் வணங்குகிறார்கள். அதுபோல் சிறப்புக்குன்றினவர்களும், மலைபோன்ற சிறப்பினையுடைய பெரியோர்கள் சிநேகத்தை அடைந்தால், அவரை யாவரும் மேன்மைப்படுத்துவர் என்பதாம். இது எடுத்துக்காட்டுவமையணி. பஞ்சதந்திர சுகிர்ல்லாபத்தில் 'சதுரதந்தன் என்னும் அரசயானைக்கு ஒரு முயல் சந்திரமண்டலத்தைக்காட்டி யானைக்கூட்டத்தை விரட்டிவிட்டுத் தன் இனமுயல்களோடு சௌக்கியமாய் வாழ்ந்தகதை' இங்குக் காணத்தக்கது. சந்திரனிடத்துள்ள கறுப்பை, முயல் என்றும், மான் என்றும், மறுவென்றும், மலையென்றும் அம்மையார்க்கிழவி என்றும்,

வேறு பலவாறும் கூறுதல் உலக வழக்கு. முயலைத்தொழுபவர் இல்லை யாயினும், உதிக்கும் சந்திரனைத் தொழுகையில் அதனிடத்துள்ள முயலை யும் சேர்த்தே தொழுகிறார்கள் என்பதாம்.

ஒண்கதிர்=ஒண்மைகதிர் பண்புத்தொகை. அன்னார் வினையாலணை யும் பெயர். (6)

பாலோ டளாயநீர் பாலாகும் அல்லது
நீராய் நிறம் தெரிந்து தோன்றாதாம்:—தேரில்,
சிறியார் சிறுமையும் தோன்றாதாம்; நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(ப-ரை) பாலொடு அளாய நீர் - பாலோடு கலந்த ஜலமானது, பால் ஆகும் அல்லது-அந்தப்பால்போல் ஆகுமல்லாது, நீராய்—, நிறம் தெரிந்து தோன்றாது-தன்(நீரின் தன்மை) காட்டி விளங்காது; (அதுபோல) தேரின்- ஆராயுங்கால், நல்ல பெரியோர் பெருமையைச்சார்ந்து - நல்ல பெரியவர் களுடைய பெருமையைச் சேர்தலினால், சிறியார் சிறுமையும் - அற்பர் களின் அற்பத்தன்மையும், தோன்றாது-(ஆம்-இரண்டும் அசை.)

பாலுடன் கலந்த நீரானது அப்பாலோடு சேர்ந்து பாலின் நிறத் தைக் காட்டுமே அல்லது நீரின் நிறத்தைக்காட்டாது. அதுபோல, ஆரா யுங்கால், நல்ல பெரியோர்களுடைய பெருமையைச் சேர்தலினால் அற்பர் களின் அற்பத்தன்மையும் வெளித்தோன்றாது என்பதாம். இது எடுத்துக் காட்டுவமையணி.

அளாய - அளாவிய என்பதின் மரூஉ. இறந்தகாலப் பெயரெச்சம். பாலோடு. ஒடு — மூன்றன் உருபு. 'நிறம் திரிந்து' என்றும் பாடபேதம். அதற்கு 'நிறம் மாறுபட்டு' எனப்பொருள் கூறுக. நல்ல - நன்மை என்ற பண்பினடிப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம். (7)

கொல்லை இரும்புனத்(து)க்குற்றி அடைந்தபுல்
ஒல்காவே ஆகும் உழவர் உழுபடைக்கு;
மெல்லியரே யாயினும் நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்றார் சினம்.

(ப-ரை) கொல்லை இரும்புனத்து - கட்டுக் கொல்லைகளிலும் பெரிய வயல்களிலும், குற்றி அடைந்தபுல் - மரக்கட்டையை அடுத்துள்ள புல்லா னது, உழவர் உழுபடைக்கு-உழுகிறவர்களுடைய கலப்பைக்கு, ஒல்காவே ஆகும் - அசையாதன ஆகும். (அதுபோலவே) மெல்லியரே ஆயினும் - வலிமை அற்றவர்கள் ஆனாலும், நல்சார்வு சார்ந்தார்மேல் - நல்ல இனத் தாரைச் சேர்ந்தவர்களிடத்து, செற்றார் சினம் - பகைத்தவர்களுடைய கோபமானது, செல்லா ஆம் - செல்லமாட்டாதாம்.

நிலங்களில் கட்டையை அடுத்த புல் உழவருடைய கலப்பைக்கு எடு படாவாம்; ஏனெனில் குற்றி எடுபடாததால் அதை அடுத்த புல்லும் எடு படாது. அதுபோல நல்லினத்தாரோடு சேர்ந்திருந்தால் விரோதிகள் கோபம் மெலியவரிடத்தும் செல்லாது என்பதாம். 'மெலியார், வலிய விரவலரை அஞ்சார், வலியோர்தமைத் தாம் மருவின்' என்றார் நன்னெறியிலும்.

இரும்புனம் - இருமை (பெருமை) + வனம் - பண்புத்தொகை. குற்றி- குறுமையையுடையது என்ற பொருள்தந்து மரக்கட்டைக்குக் காரணப் பெயர் ஆயிற்று. உலக வழக்கில் இதைக் குச்சி என்பர். புல், சினம், இன்னபால் என்னாத அஃறிணைப்பெயர்கள் ஆதலால், ஒன்றன்பால் பலவின்பால் ஆகிய இரண்டுக்கும் வரும். இங்கு பலவின்பால் ஆதலால், ஒல்கா, செல்லா - என்ற பன்மை வினையைக் கொண்டன. படை - ஆயுதம். உழுபடை - உழும் ஆயுதம்; கலப்பை. செற்றார் - வினையாலணையும் பெயர். செறு - பகுதி. (8)

நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினம் சேரக் கெடும்.

(ப-ரை) நிலம் நலத்தால் - விளைகின்ற நிலத்தி[ன்] நன்மையால், நந்திய - வளர்ந்த, நெல்லேபோல் - நெல்லைப்போல, தம்[…] குலம் நலத் தால் - நங்கள் தங்கள் குலத்தின் மேன்மையினால், சான்றோர் ஆகுவர் - மனிதர் மேன்மை உடையவர்கள் ஆவார்கள். கலம் நலத்தை - மரக் கலத்தின் வலிமையை, தீ வளி-கடுங்காற்றானது, சென்று சிதைத்துஆங்கு- போய்க் கெடுத்தல்போல, சான்றாண்மை - ஒருவருடையமேன்மையானது, தீ இனம் சேர - கெட்ட இனத்தைச் சேர்தலினால், கெடும் - அழியும்.

நிலவளத்தால் வளர்ந்த நெற்பயிரைப்போலத் தாம்தாம் சேரும் குலப் பெருமையால் மனிதர் மேன்மையுடையவர்கள் ஆவார்கள். மரக்கலத்தின் வலிமையை கடுங்காற்றானது போய்க்கெடுத்தல்போல, ஒருவருடைய மேன்மையானது, கெட்ட இனத்தைச், சேர்தலினால் கெட்டழியும் என்ப தாம், இது உபமாலங்காரம். கலம் - பொதுப்பெயர். அணிகலம் உண் கலம் என்பவற்றில் அமைந்ததை நோக்குக: இங்குச் சிறப்பாய்க் கப்பலை உணர்த்திற்று. ஆண்மை - ஆளும்தன்மை. சான்றாண்மை - நற்குணங்க ளால் நிறைந்து ஆளும் தன்மை. இச்சொல் பண்புப்பெயர். (9

மனத்தான் மறுவில ரேனுந்தாம் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால்.

(ப-ரை) மனத்தால் மறு இலர் எனும் - மனத்தின் நிலைமையால் குற்றமற்றவர்கள் ஆனாலும், தாம் சேர்ந்த இனத்தால் - தாம் சிநேகித்த கூட்டத்தின் கேட்டால், இகழப்படுவர் - மனிதர்கள் இகழப்படுவார்கள், (எதுபோல என்னின்) எறிபுனம் - வெட்டப்பட்ட மரச்செறிவில் தீப் பட்டக்கால் - நெருப்பானது பட்டவிடத்து, புனத்து—அக்காட்டில் உள்ள, வெறிகமழ் - நறுமணம் கமழுகின்ற, சந்தனமும் வேங்கையும் - சந்தன மரமும் வேங்கை மரமும், வேம் - வெந்துபோகும்.

இயற்கையில் மனத்தில் குற்றமற்றவர்கள் ஆனாலும், தாம் கூடிய கூட்டத்தால் மனிதர்கள் நிந்திக்கப்படுவார்கள். (அது எதுபோல எனின்) வெட்டப்பட்ட மரச்செறிவில் நெருப்பானது பற்றினபொழுது அக்காட்டி லிருக்கிற சந்தனமரமும் வேங்கைமரமும் வெந்துபோம் என்பதாம். இது திருஷ்டாந்த அல[illegible]காரம்.

தாம் நல்ல[illegible]னும் தீயினத்தைச் சேர்ந்தால் கேடு அடைவர். என்பதாம். ‘ச[illegible]த்தைச் சார்தருவும் தக்கமணம் கமழும், சந்தனத்தைச் சார்வேய் தழ[illegible]பற்ற - அந்தவனம், தானும் அச்சந்தனமும் தன்னினமும் மாள்வதன்றித், தானும் கெடச சுடுமேதான், என்னும் நீதிவெண்பாச் செய்யுளையும் நோக்குக. எறிபுனம் வினைத்தொகை நிலைத்தொடர். (10)

முற்றிற்று.

184384
சென்னை-600 008